முத்தமிழறிஞர் கலைஞர்

# மு. கருணாநிதி

## நூற்றாண்டு விழா மலர்






**தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்**

**திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி**

THAMIZHAR MUNNETRA KAZHAGAM – LONDON | THIRUVALLUVAR TAMIL SCHOOL

TMK HOUSE – 464 EAST AVENUE, MANOR PARK, LONDON E12 6SQ | EST. 1975 | CHARITY NO: 282501


/SuvaiFoods.UK /suvaifoods
For Wholesale & Catering Orders
suvaifoods.co.uk
0203 441 5020
SUVAI
Taste of India
UNITED KINGDOM | HONG KONG | SINGAPORE | MALAYSIA
Google
FRESHLY PREPARED & DELIVERED NEXT DAY!
IDLI & DOSA (Batter Mix)
vada batter
CHAPATI
MULTI MILLET
SUVAI
Suvai Foods UK LTD Unit 6, Riverside Industrial Estate, Thames Road, Barking 1G1 1OND



# என் உயிரினும் மேலான
# அன்பு உடன்பிறப்புகளே...

# தமிழ்த்தாய் வாழ்த்து

செந்தமிழே வணக்கம் - செந்தமிழே வணக்கம்

ஆதி திராவிடர் வாழ்வினை சீரோடு விளக்கும்
செந்தமிழே வணக்கம்
ஐந்து இலக்கணங்கள் ஆய்ந்தே
உலக அரங்கினுக்கே முதல் முதல் நீ தந்ததாலும்
(செந்தமிழே வணக்கம்)

மக்களின் உள்ளமே கோயில் - என்ற
மாசற்ற கொள்கையில் வாழ்ந்ததனாலே
பெற்ற அன்னை தந்தை அன்றி - மேலாய்
பிறிதொரு தெய்வம் இல்லை என்றதாலே
(செந்தமிழே வணக்கம்)

சாதி சமயங்கள் இல்லா - நல்ல
சட்ட அமைப்பினைக் கொண்டே
நீதி நெறிவழி கண்டாய் - எங்கள்
நெஞ்சிலும் வாழ்விலும் ஒன்றாகி நின்றாய்
(செந்தமிழே வணக்கம்)

கவிஞர் ந. மா. முத்துக்கூத்தன்

# முன்னுரை

இனமான உணர்ச்சியும், எழுச்சியும், நம் தமிழர்கள் பெற்றுய்யத் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் ஆய்ந்தளித்த சமுதாயச் சீர்திருத்தக் கொள்கை வழி நின்று, இலண்டன் வாழ் தமிழர்களிடையே மொழி - இனமான உணர்வையூட்டி ஏற்றமுறப் பணியாற்றிவரும் இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் உவந்து படைத்திடும் முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி நூற்றாண்டு விழா மலர் தமிழ் கூறும் நல்லுலகில் சிறப்பிடம் பெற்று, சிந்தை மலர்த்தும் என்பதில் ஐயமில்லை!.

தமிழ் மொழிக்கும் - தமிழ் இனத்திற்கும் - தமிழ் நாட்டிற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய தொண்டினை அளந்து கூறிட இயலுமோ?. " நாநலம் என்னும் நலனுடைமை" என்னும் குறள் நெறிக்கொப்ப நாவன்மையும், "அன்பறிவு தேற்றம் அவாவின்மை" என்னும் பண்பார்ந்த குணச்சிறப்பும், புகழ்பூத்த தேன்மதுரத் தமிழ்ப் பொழிவும், பார்போற்றும் படைப்பாளியாக இலக்கியமும், இலக்கணமும், அறிவியலும், அரசியலும் அனைத்தையும் உணர்ந்தவராகத் தலைவர் கலைஞர் அவர்கள் விளங்கினார்கள்.

நெஞ்சுக்கு நீதியும், திருக்குறளுக்கு ஓவியமும் திக்கெட்டும் ஒலித்திடச் செய்தவர். இந்தியை எதிர்த்து நின்றவர். இந்தியாவைத் தாங்கி நின்றவர். தமிழ்நாட்டின் மானம் காத்திடவும், தமிழரின் சுயமரியாதையை மீட்டெடுக்கவும், ஓய்வறியாப் போராளியாகவும், எடுத்த பணியை விறுபட முடித்திடும் ஆற்றல் மறவராகவும் ஒருங்கே அமையப் பெற்றவர் முத்தமிழ் வித்தகர்.

பெண்மைக்கு ஒளி கூட்டிடவும் உழைத்துண்ணும் தொழிலாளர் உயர்ச்சியுற்று நலமுற வாழ்ந்திடவும் சட்டங்கள் பல இயற்றியவர் கலைஞர். முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பெயர் விளங்க இலண்டன் மாநகரில் நூற்றாண்டு விழாவெடுத்துள்ளோம். எங்களைப் போலும் நூற்றாண்டு நாயகரைப் போற்றுவதற்கு நீங்களும் முன்வருமாறு உரிமையோடு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

வாரீர்! வாரீர் ! வணக்கம்.

**இரா. அன்பழகன்**
தலைவர்
**தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்.**
**திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி**

## ‘An Architect of Change’

Muthuvel Karunanidhi, fondly known as Kalaignar Karunanidhi, was a prominent Indian politician and one of the most influential figures in Tamil Nadu's political landscape. With a career spanning over six decades, he left an indelible mark on Tamil Nadu's socio-political landscape and played a significant role in shaping the state's history.

Born on June 3, 1924, in Thirukuvalai, Tamil Nadu, Karunanidhi was drawn to the world of literature and politics from an early age. Inspired by the socio-political movements of the time, he joined the Dravidian movement and the Dravida Munnetra Kazhagam (DMK) party led by E.V. Ramasamy Periyar and Annadurai, respectively.

Karunanidhi quickly rose through the ranks of the DMK and assumed leadership following the demise of Annadurai in 1969. As the Chief Minister of Tamil Nadu, a position he held for a record-breaking five terms, he initiated numerous welfare and development programs. His governance focused on social justice, advocating for the upliftment of marginalized sections of society, empowerment of women, and Tamil language and culture.

As well as being a political icon he was also renowned for his literary talents through his writings, earning him the title "Kalaignar," meaning "artist" in Tamil. His passion for the Tamil language was showcased in his determination to successfully lobby for Tamil to be granted a Classical Language status in 2004.

Kalaignar M. Karunanidhi especially had a great appreciation for Thirukkural and a deep respect for Thiruvalluvar the author of the Thirukkural. He recognized its significance in Tamil culture and literature.
Karunanidhi often quoted verses from Thirukkural in his speeches and writings, incorporating its principles into his political ideologies.

He was instrumental in promoting Thirukkural and its teachings and acknowledged the importance of Thirukkural in shaping Tamil culture and literature. His contributions played a significant role in promoting Thirukkural and ensuring that the legacy of Thiruvalluvar continues to inspire generations. In order for everyone to gain an understanding of each Thirukurral verse he introduced the Kuraloviam, a pictoral representation of each Thirukurral.

Karunanidhi's passion for literature and the arts greatly influenced Tamil Nadu's cultural landscape. He was an acclaimed playwright, screenwriter and poet, penning several scripts for Tamil films. His dialogues and songs often conveyed social messages, and his contribution to the Tamil film industry earned him immense popularity among the masses. Karunanidhi's speeches, adorned with literary references, captivated audiences and showcased his oratorical prowess.

Tidel Parks which is an information technology hub situated in Chennai was another brainchild of Kalaignar Karunanidhi. This is one of the largest IT parks in India. It was set up in 2000 to promote the growth of IT technology in the state of Tamil Nadu. This technological revolution has inspired many young tamils to lead the world in IT on a global scale.

Kalaignar Karunanidhi's contributions to Tamil Nadu's politics and society remain unparalleled. As a visionary leader, he fought tirelessly for social justice, championing the rights of the marginalized and working towards a more equitable society. His literary brilliance and political acumen made him a towering figure in Indian politics. Kalaignar Karunanidhi will always be remembered as an architect of change, leaving a lasting legacy for generations to come.

**Alli Kumar**
Vice President
**Thamizhar Munnetra Kazhagam - London**
**Thiruvalluvar Tamil School**

**கனிமொழி கருணாநிதி**
**Kanimozhi Karunanidhi**
Member of Parliament
Lok Sabha
Thoothukkudi Constituency - Tamil Nadu

सत्यमेव जयते

26, Dr. Rajendra Prasad Road,
New Delhi - 110001
Telefax : 011-23782887
E-mail : kanimozhimds@gmail.com

46/1, Prashanthi Apartments,
2nd Cross Street, C.I.T. Colony,
Mylapore, Chennai-600 004 (T.N.)
Tel.: 044-24670606
Fax: 044-24670001

29.05.2023
புது தில்லி

**வாழ்த்துச் செய்தி**

வணக்கம். லண்டனில் 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வரும் 'தமிழர் முன்னேற்றக் கழகம்' ஆற்றி வரும் பணிகள் குறித்தும் ஐரோப்பாவில் தொடங்கப்பட்ட முதல் தமிழ்ப் பள்ளியான திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி குறித்தும் அறிந்து மகிழ்ந்தேன். தங்களின் செயல்பாட்டின் வழியாக தமிழ் மொழியையும் தமிழரின் வாழ்வியலையும் அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்வது சிறப்பானது.

தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை லண்டனில் கொண்டாடவிருப்பதையும், விழாவை ஒட்டி சிறப்பு மலர் வெளியிடவிருப்பதையும் அறிந்தேன். தமிழ் சமுதாயத்திற்கு அவர் ஆற்றிய தொண்டும், அவருடைய தொலைநோக்கு திட்டமிடலும் செயல்பாடுகளும், இன்று தமிழ்நாட்டையும் தமிழர்களையும் உலக அரங்கில் தலைநிமிரச் செய்திருக்கிறது.

நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறவும், விழா மலர் சிறக்கவும், உங்கள் தமிழ்ப்பணிகள் சிறந்த முறையில் தொடரவும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

அன்புடன்,

கனிமொழி கருணாநிதி

**Constituency** : 102F/20M, 6th Street Kurinji Nagar, Polpettai, Thoothukkudi-628002. Tamil Nadu • Tel.: 0461-2348101

**THE RT. HON. SIR STEPHEN TIMMS MP**

**House of Commons** | **Tel: 020 7219 4000**

**London SW1A 0AA** | **Fax: 020 7219 2949**

***Labour Member of Parliament for East Ham***

Thamizhar Munnetra Kazhagam – London (TMK London)
46a East Avenue
Manor Park
London
E12 6SQ

**Centenary of Kalaignar M. Karunanidhi** 15 May 2023

Dear Friends,

Thank you for inviting me to your celebrations in June. I am looking forward to attending and being with you all.

Kalaignar M. Karunanidhi was a a hardworking politician. Not only was he a founding member of the Dravidian Progressive Federation (Dravida Munnetra Kazhagam; DMK) and the party's president for decades, but I understand he was also the longest serving Chief Minister of Tamil Nadu. I know from my own experience representing East Ham that long term public service is no easy feat.

It is therefore all the more impressive that, on top of that, he made such an important contribution to Tamil culture. His literary work embodied the unique culture, that Tamils across the globe are rightly so proud of. When facing struggles in India and Sri Lanka, Kalaignar Karunanidhi's example has always been looked to, and admired, by Tamils.

I continue to represent and campaign on Tamil issues in Parliament. In March this year I attended the 52nd Session of United Nations Human Rights Council to support work on behalf of Sri Lankan Tamils, meeting UN staff and international delegations. I will continue to support this work.

With all best wishes,

Yours sincerely,

Stephen Timms

SIR STEPHEN TIMMS MP

*Electronic mail: stephen@stephentimms.org.uk* *Web: http://www.stephentimms.org.uk/*

**தங்கம் தென்னரசு**
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு
மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

நாள் 08.05.2023

## வாழ்த்துரை

தன் மூச்சுக்காற்று உள்ளவரை முப்பொழுதும் தமிழ் – தமிழரின் முன்னேற்றத்தையே எண்ணி இயங்கிய, ஓய்வறியா அறிவுச் சூரியன், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

**"தமிழர்களே தமிழர்களே நீங்கள் என்னைக் கடலில்**
**தூக்கிப் போட்டாலும் கட்டுமரமாகத்தான் மிதப்பேன். அதில் ஏறி நீங்கள்**
**பயணம் செய்யலாம். ஒருபோதும் கவிழ்ந்து விட மாட்டேன்.."**

என்று முழங்கியவர் : முழங்கியபடியே விளங்கியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

முத்தமிழாய் வாழ்ந்த, அரசியல் கரைகண்ட அருந்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைப் புகழ்மிகு இலண்டன் மாநகரில் கொண்டாட இருக்கும் இலண்டன் – தமிழர் முன்னேற்றக் கழகம் மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த அத்துணை தமிழ் உறவுகளுக்கும் என் உள்ளன்பு வாழ்த்துகள்.

உலகின் மிக முகாமையான வணிக மற்றும் அரசியல் மையமாகத் திகழ்கிற, உலகின் நான்காவது பெரிய நகரமான இலண்டன் மாநகரின் கிழக்குப் பகுதியான ஈஸ்ட்காமில் 1975-ஆம் ஆண்டு, மொழிப்பற்றும் இனப்பற்றுமிக்க தமிழன்பர்களால் தொடங்கப்பெற்று, தமிழ்ப்பணியில் விரைவில் பொன்விழாக் காணவிருக்கின்ற கழகம்தான் இலண்டன் – தமிழர் முன்னேற்றக் கழகம். ஐரோப்பாவில் தமிழ் பயிற்றுவிக்கத் தொடங்கப்பெற்ற முதல் தமிழ்ப்பள்ளி என்ற சிறப்பைக் கொண்டது திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி.

**தங்கம் தென்னரசு**
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு
மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

நாள்.................................

- 2 -

முத்தமிழறிஞரின் வழித்தடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றல்மிகு தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில், பெருமைகள் நிறைந்த தமிழர் முன்னேற்றக் கழகம் – இலண்டன், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியால், அரைநூற்றாண்டாளில் ஓர் அரசியல் கட்சியின் ஆளுமைமிக்க தலைமையாகவும், பல நூற்றாண்டுகளுக்குத் தமிழர்களின் நெஞ்சங்களில் தலைவராகவும் வாழ்கின்ற முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா எடுப்பது சாலப்பொருத்தமானது. இந்த நூற்றாண்டு விழாவானது சிறப்புற நடந்தேற எல்லாம் வல்ல தமிழன்னை நல்லருள் புரியட்டும் என்று வேண்டி வாழ்த்துகிறேன்.

இந்த நூற்றாண்டு விழாவை முன்னெடுக்கும் தமிழர் முன்னேற்றக் கழகம் – இலண்டன், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி ஆகியவற்றின் தலைவர் இர. அன்பழகன் உள்ளிட்ட அனைவருக்கும் என் மனமார்ந்த பாராட்டுகள் உரித்தாகுக.

அன்புடன்,

(தங்கம் தென்னரசு)

**மு.பெ. சாமிநாதன்**
தமிழ் வளர்ச்சி மற்றும்
செய்தித் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009

நாள் 24.05.2023

## வாழ்த்துச் செய்தி

முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா வரும் 10.06.2023 அன்று இங்கிலாந்து தலைநகர் இலண்டனில் உள்ள தமிழர் முன்னேற்றக் கழகம் இலண்டன் கொண்டாடப்பட உள்ளதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழினத் தலைவர் அய்யா கலைஞர் அவர்கள் தமிழுக்கும், தமிழினத்திற்கும் பெரும் பங்காற்றியுள்ளார். மேலும், தென்முனை கன்னியாகுமரி தொடங்கி வடமுனை காஷ்மீர் வரை அய்யாவின் புகழ் எட்டு திக்கும் பரவும் வகையில் எண்ணற்ற பல திட்டங்களை தீட்டி அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடி மாநிலமாக திகழும் வகையில் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளார்.

முத்தமிழறிஞர் அய்யா கலைஞர் அவர்கள் ஆற்றிய தொண்டினை நினைவு கூர்ந்திடும் வகையில் கலைஞரின் நூற்றாண்டு விழா சிறப்பாக நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்!

அன்புடன்

(மு.பெ.சாமிநாதன்)



# திராவிடர் கழகம்

தலைமை நிலையம்: பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை-600 007
தமிழ்நாடு, இந்தியா. • தொலைபேசி: 91-44-26618161/62/63 • தொலைநகல்: 91-44-26618862
• மின் அஞ்சல்: dkheadquarters@gmail.com • இணையதளம்: www.dravidarkazhagam.org

நிறுவனர் தலைவர்
**தந்தை பெரியார்**

தலைவர்
**கி.வீரமணி,** எம்.ஏ.,பி.எல்.,

நாள்: 7.5.2023

பெறுநர்:

மாண்மிகு **இர.அன்பழகன்** அவர்கள்,
தலைவர், தமிழர் முன்னேற்றக் கழகம்,
இலண்டன், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி.

பேரன்புடையீர்,

வணக்கம். இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி ஆகிய அமைப்புகளின் சார்பில், முத்தமிழ் அறிஞர் மாண்மிகு கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழா நடப்பதும், அதனையொட்டி, ஆவணக் களஞ்சியமாக சிறப்பு மலர் வெளியிட இருப்பதும் அறிந்து மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

திராவிடர் கழகத்தில் தந்தை பெரியாரின் சீடராக – 'குடிஅரசு' இதழ் பட்டறையில் தயாரிக்கப்பட்ட கூர்வாளாக – ஒப்பற்ற உழைப்பாலும் – உறுதியாலும், ஒப்பரிய ஆற்றலாலும் உச்ச நிலையை எட்டிய பன்முகத்தன்மை கொண்ட சுயமரியாதைச் சுடரொளியே நமது கலைஞர் ஆவார்கள்.

பகுத்தறிவு, சமூகநீதி, பெண்ணுரிமை, சமத்துவம், சமதர்மம், இனவுணர்வுத் தடங்களில் எல்லாம் அழிக்க முடியாத தடங்களைப் பொறித்த – திராவிட இயக்க வரலாற்றில் என்றென்றும் ஒளி வீசும் எழுத்தாளர், பேச்சாளர், ஆட்சியாளர் என்ற பேருருவின் மறுபெயர்தான் நமது மாண்மிகு கலைஞர் அவர்கள். மாணவர் பருவந்தொட்டு இயக்கப் பணியாற்றியவர்கள் நாங்கள். அந்தப் பசுமையான நினைவு அலைகளோடு மலர் மணக்க வாழ்த்துகளைக் குவிக்கின்றேன்.

மிக்க அன்புள்ள,

(கி.வீரமணி)
தலைவர், திராவிடர் கழகம்

1

சிவ.வீ. மெய்யநாதன்
சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை
மாற்றத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

26.5.2023

**வாழ்த்துச்செய்தி**

உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை 10.6.2023 அன்று இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி, நியூகாம் த.மு.க இளைஞர் மன்றம் இணைந்து கொண்டாடுவதும், சிறப்பு மலர் வெளியிடுவதும் அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஆங்கிலேய ஆட்சியின்போது, மாண்டேகு – செம்ஸ்போர்டு பரிந்துரைகளின்படி 1920 டிசம்பரில் சென்னை மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி வென்று முதன்முறையாக ஆட்சி அமைத்தது. அப்போது, இங்கிலாந்து இளவரசர் கன்னாட் கோமகன் வருகைதந்து 1921 ஆம் ஆண்டில் தொடங்கிவைத்த சென்னை மாகாண சட்டமன்றத்தின் நூற்றாண்டு விழாவை 2.8.2021 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு திரு. இராம்நாத் கோவிந்த் அவர்களை அழைத்து வெகுசிறப்பாக நடத்தியதுடன்; முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்தையும் பேரவை மண்டபத்தில் திறந்து வைக்கச் செய்தார்.

இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கிருத்துவ சமயம் பரப்ப வந்த குருமார்கள் சென்னை மாகாணம் வந்து தமிழ் மக்களுடன் பழகி உரையாடும் பொருட்டுத் தமிழ் மொழியைக் கற்கப் புகுந்து; தமிழ்மொழியின் இலக்கண, இலக்கிய வளங்களில் மூழ்கி மயங்கி; உலகின் மிகச்சிறந்த மொழி தமிழ் என்று போற்றினர்.

அறிஞர் ஜி.யு.போப் அவர்கள் தம் கல்லறையில் "ஒரு தமிழ் மாணவன்" என்றே தம் பெயரைப் பொறிக்கச் செய்தார். வீரமாமுனிவர் இயேசுநாதரின் வரலாற்றைத் தேம்பாவணி எனும் இலக்கியமாகத் தமிழுக்குத் தந்தார். சதுர் அகராதி தந்து அகராதிக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினார்.

இராபர்ட் கால்டுவெல் அவர்களோ தென்னக மொழிகளை ஆராய்ந்து "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" எனும் நூல் எழுதி, தமிழ்மொழியின் மேன்மையை மேதினிக்கு வெளிப்படுத்தினார். சமஸ்கிருதமே இந்தியாவின் மொழி, இந்திய மொழிகளுக்கெல்லாம் சமஸ்கிருதமே மூலமொழி என மேநாட்டார் கொண்டிருந்த எண்ணத்தைத் தகர்த்து – திராவிட மொழிகளில் தலைமை சான்ற மொழி தமிழ்மொழி! அது தனித்தன்மை வாய்ந்தது; சமஸ்கிருதம் வேறு – திராவிடத் தமிழ்மொழி வேறு; தமிழ் உயர்தனிச் செம்மொழி எனப் பறைசாற்றினார். அதன் பின்னர்தான் உலக நாடுகள் திராவிட மொழிக் குடும்பத்தை – தமிழின் மேன்மையை உணர்ந்து போற்றத் தொடங்கின.

அதன் விளைவாகத்தான், 1968இல் தமிழ்நாடு முதலமைச்சரான பேரறிஞர் அண்ணா அவர்கள் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டை சென்னையில் நடத்தியபோது, கடற்கரைச் சாலையில் நிறுவிய 10 தமிழ்ச் சான்றோர் சிலைகளில் ஜி.யு.போப், வீரமாமுனிவர், இராபர்ட் கால்டுவெல் ஆகியோர் திருவுருவச் சிலைகளையும் நிறுவினார்.

பேரறிஞர் அண்ணாவிற்குப்பின் ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகத் திகழ்ந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்திற்கும் எண்ணற்ற திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தினார். தமிழ் செம்மொழி என்று போற்றிய இராபர்ட் கால்டுவெல் அவர்கள் மீது அளவில்லாப் பாசம் கொண்டிருந்தார். கால்டுவெல் அவர்களைப் போற்றி அவர் நெல்லையில் தங்கியிருந்து சமயத் தொண்டுகளாற்றிய இடையன்குளம் இல்லத்தை 17.2.2011 அன்று நினைவு இல்லமாக மேம்படுத்தினார்.

அறிஞர் கால்டுவெல்– பரிதிமாற்கலைஞர் கூறிய நெறியில் முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் செம்மொழி என இந்திய அரசினால் ஆணை பெற்று; கோவையில் 2010 இல் உலகத்தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தி பெருமிதம் கொண்டார்.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது தமிழகம் வந்த பொறியியல் மேதை பென்னிகுய்க் இலண்டன் மாநகரில் இருந்த தம் குடும்பச் சொத்துக்களை விற்றுவந்து முல்லைப் பெரியாறு அணையைக் கட்டி, தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களை வளம்பெறச் செய்தார். அப்பெருமகனைப் போற்றி முத்தமிழறிஞர் கலைஞர் அவருக்கு மதுரையில் சிலை அமைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களோ, இலண்டன் மாநகரில் கிம்பர்லியில் பென்னிக்குய்க் அவர்களின் சிலையை நிறுவி தமிழனின் நன்றி உணர்வை உலகுக்கு வெளிப்படுத்தினார்.

இப்படி நம் அருமைத் தமிழ்நாட்டிற்கும் ஆங்கிலேயரின் இலண்டன் மாநகருக்கும் ஏற்பட்ட இணைப்பின் அடையாளமாக ஆங்கில மொழியில் வல்லமை பெற்று இலண்டன் மாநகரில் பணிவாய்ப்புகளை பெற்றுள்ள நம் தமிழ்ச் சொந்தங்கள் தமிழகத்தைப் போற்றுவதுடன் தமிழ்ப்பள்ளியையும் நிறுவி அங்குள்ள தமிழர்கள் தமிழ் பயிலவும் வகை செய்துள்ளனர்.

அவர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் அடையாளமாக இன்று உலகெங்கும் புகழப்படும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை இலண்டன் மாநகர் தமிழர் முன்னேற்றக் கழகம்– திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி, நியூகாம் த.மு.க இளைஞர் மன்றம் சார்பில் கொண்டாடி, சிறப்புமலர் வெளியிடும் சீரிய பணிகளை என் இதயம் கனிந்து பாராட்டுகிறேன்.

விழா நினைவாக வெளியிடப்படும் சிறப்பு மலர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உலகத் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய அளப்பரும் பணிகளைத் தொகுத்துரைத்திடும் அரிய ஆவணமாகத் திகழ்ந்திட எனது உளமார வாழ்த்துகிறேன்.

அன்புடன்

26/5/2023

(சிவ.வீ.மெய்யநாதன்)

பெறுநர்

அன்புத் திரு. இர. அன்பழகன்
தலைவர்,
தமிழர் முன்னேற்றக் கழகம் –
இலண்டன் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி
46.ஏ, கிழக்கு அவின்யூ, மனோர்பார்க்,
இலண்டன்.

முனைவர் த. சுமதி (எ)
தமிழச்சி தங்கபாண்டியன்,
M.A., M.Phil., Ph.D.,
நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை)
தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி - தமிழ்நாடு

உறுப்பினர்
நாடாளுமன்ற நிலைக்குழு - தகவல் தொழில்நுட்பம்
நாடாளுமன்ற ஆலோசனைக்குழு - சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல்
BOC - தேசிய உடையலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (NIFT)

सत्यमेव जयते

இல்லம்
மனை எண் 8, முதல் பிரதான சாலை
ராஜா நகர், நீலாங்கரை
சென்னை 600115, தமிழ்நாடு
கைபேசி +91 [illegible] தொலைபேசி 044-[illegible]

அலுவலகம்
எண் 115, டாக்டர் முத்துலட்சுமி சாலை
பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13
இணைப்பு கட்டிடம் திருவேங்கடம் சாலை,
அடையாறு, சென்னை-600 020, தமிழ்நாடு
தொலைபேசி: 044-[illegible]

## தேம்ஸ் நதி தீரத்தில் கலைஞரின் நூற்றாண்டு விழா வாழ்த்து மடல்

ஆயிரம் பிரச்சனைகள் சூழ்ந்து வந்தாலும்
புன்னகை மாறாமல் பேசுபவன் மனிதன்
ஆயிரமாயிரம் பிரச்சனைகள் சூழ்ந்து வந்தாலும்
சிந்தித்துச் சரியாகப் பேசுபவனே தலைவன்

இந்த நூற்றாண்டின் மாபெரும் தலைவராகக் கொண்டாடப்பட்டு வருபவர் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழையும் தமிழ் மக்களையும் கவசம்போல இருந்து காத்தவர் தலைவர் கலைஞர். செந்தமிழ் மொழியை வளர்த்தெடுத்தோர் பலரிருக்க, செந்தமிழைச் செம்மொழியாய் வார்த்தெடுத்த பெருமை தலைவர் கலைஞரையே சாரும்.

கோபாலபுரத்திலிருந்தாலும் கோட்டையிலிருந்தாலும் மக்கள் பணி செய்வதையே மூச்சாகப் பேச்சாகக் கொண்டவர். தமிழ்நாட்டில் தலைவர்களாகப் பலர் இருந்திருந்தாலும் கொள்கைக் குன்றென நிமிர்ந்து நின்று, மக்கள் மனதில் அழியாக் கல்வெட்டு எழுத்தாய் நிரந்தரமானவர்.

மாறாத நினைவாற்றலும் நெஞ்சுரமும் கொண்டு சரித்திரம் தன் பக்கங்களில் எழுதி வைத்துக் கொள்ளும் வண்ணம் பல சாதனைகள் செய்தவர். இனித் தமிழர் செய்யப்போகும் பல நற்செயல்களுக்கும் பாதை வகுத்துத் தந்திட்டவர் வித்தகத் தலைவர் கலைஞர். பல நூற்றாண்டுகள் மக்கள் பட்ட துயரங்களைப் பட்டெனத் துடைத்தெறிந்த பாசத் தலைவரே நூற்றாண்டு விழா காணும் நம் கலைஞராவார்.

ஏழைமக்கள் விழுந்து விடாமல் எழுந்து நிற்க கரம் தந்தவர். நடுத்தர வர்க்க மக்களும் நலிந்துவிடாமல் இருக்க திட்டங்கள் வகுத்து துணை நின்றவர். உலகெங்கும் உள்ள தமிழர்கள் போற்றும் வகையில் தமிழகத்தை ஆண்டு நிலைத்த புகழைப் பெற்ற

பிளாட் எண் C3, சிந்து அப்பார்ட்மெண்ட், பி.கே.எஸ் மார்க், புது டெல்லி-110001
மின்னஞ்சல்: [illegible], வலைதளம்: [illegible]

முனைவர் த. சுமதி (எ)
தமிழச்சி தங்கபாண்டியன்,
M.A., M.Phil., Ph.D.,
நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை)
தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி - தமிழ்நாடு

உறுப்பினர்
நாடாளுமன்ற நிலைக்குழு - தகவல் தொழில்நுட்பம்
நாடாளுமன்ற ஆலோசனைக்குழு - சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல்
BOG - தேசிய உடையலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (NIFT)

सत्यमेव जयते

இல்லம்
மனை எண் 8, முதல் பிரதான சாலை
ராஜா நகர், நீலாங்கரை
சென்னை 600115, தமிழ்நாடு
கைபேசி +91 [illegible] தொலைபேசி 044-[illegible]

அலுவலகம்
எண் 115, டாக்டர் முத்துலட்சுமி சாலை
பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-13
இணைப்பு கட்டிடம் திருவேங்கடம் சாலை,
அடையாறு, சென்னை 600 020, தமிழ்நாடு
தொலைபேசி 044-[illegible]

(2)

கலைஞரின் நூற்றாண்டு விழா கடல்கடந்து தேம்ஸ் நதிக்கரை நகராம் லண்டனில் கொண்டாடப்படவிருப்பது பேருவகை தரக்கூடிய ஒன்றாகும்.

செயல்திறமில்லாத தலைவர்களை வரலாறு செலவுக்கணக்கில் வைத்துக்கொள்ளும்; தீரமிக்க கூர்மதி கொண்ட செயல்திறமிக்க தலைவர்களை வரலாறு வரவுக்கணக்கில் வைத்துக் கொள்ளும். அழியாத பொக்கிசமாகவும் போற்றிப் பாதுகாக்கும். காலப்பேரேடுகளில் காவியமாகிப்போன தலைவர்தான் நம் போற்றுதலுக்குரிய தலைவர் கலைஞர். ஐரோப்பாவில் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழாவைச் சீரும் சிறப்புமாகக் கொண்டாடவிருக்கும் லண்டன் வாழ் தமிழுணர்வாளர்களின் கலைஞர்பற்றைக் கண்டு நெகிழ்கிறேன். உளமார மகிழ்கிறேன்.

உலகப் பெருநகரங்களின் சிகரமாக விளங்குகின்ற லண்டனில் தமிழர் முன்னேற்றக் கழகமும், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக உள்ளன்போடு வாழ்த்துகிறேன். இத்தகைய தமிழுணர்வாளர்களின் செயல்பாடு மேன்மேலும் சிறக்க எண்ணற்ற முறைகள் வாழ்த்தி மகிழ்கிறேன்.

த. சுமதி

முனைவர் த. சுமதி (எ) தமிழச்சி தங்கபாண்டியன்
நாடாளுமன்ற உறுப்பினர் (மக்களவை)
தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதி
சென்னை, தமிழ்நாடு.

பிளாட் எண் C3, சிந்து அப்பார்ட்மெண்ட், பி.கே.எஸ் மார்க், புது டெல்லி 110001
மின்னஞ்சல்: contact@thamizhachi.com, வலைதளம்: www.thamizhachi.com

விருதுகள் :
- பத்மபூஷண் • பத்மஸ்ரீ
- சாகித்ய அகாடமி • சரஸ்வதி சம்மான்
- தேசிய விருதுகள் - 7 (இந்தியாவின் சிறந்த பாடலாசிரியர்)
- தமிழ்நாடு அரசு விருதுகள் - 6 (சிறந்த பாடலாசிரியர்)
- மூன்று பல்கலைக் கழகங்களின் மதிப்புறு முனைவர் பட்டங்கள்

*26.05.2023*

**இர.அன்பழகன்**
தலைவர்
தமிழர் முன்னேற்றக் கழகம் மற்றும்
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி, இலண்டன்

அன்புடையீர்!

வணக்கம்.

தமிழர் முன்னேற்றக் கழகம் சார்பில் இலண்டனில் கலைஞர் நூற்றாண்டு விழாக் கொண்டாட விருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி.

கலைஞர் என்பவர் இந்த நூற்றாண்டின் தமிழ் உச்சம்; இன அடையாளம். முதல் தலைமுறையில் எழுதிப் பழகிய தமிழ் நடையை மூன்றாம் தலைமுறைக்கும் செல்லுபடி செய்தவர். படைப்பாளிகளை உருவாக்கிய படைப்பாளி.

தமிழர்களின் அக மாற்றத்திற்கு ஓரளவும் தமிழகத்தின் புறமாற்றத்திற்குப் பேரளவும் காரணமானவர். இழந்து போன தமிழ் அடையாளங்களைத் தன் எழுத்திலும் பேச்சிலும் செயலிலும் மீட்டெடுத்தவர். வாழ்வின் நிறைவு வரை சற்றும் சலனமுறாப் பகுத்தறிவாளர். தமிழுக்குச் செம்மொழிப் பெருமை பெற்றுத்தந்த செம்மல். இரண்டு நூற்றாண்டுகளிலும் இரண்டு கால்களை அழுத்தமாய் ஊன்றி நின்ற தலைவர்.

அவர் நூற்றாண்டினைக் கொண்டாட முன்வந்த தமிழர் முன்னேற்றக் கழகத்திற்கு என் பாராட்டுக்கள்.

32, டைகர் வரதாச்சாரி சாலை, முதல் குறுக்குத் தெரு, கலாக்ஷேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை - 600 090. ✆ 2491 4747

வைரமுத்து

'திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி', ஐரோப்பாவில் தொடங்கப்பட்ட முதல் தமிழ்ப் பள்ளி என்பதை அறிந்த போது பெருமிதப்பட்டேன்.

மொழி மட்டுமே நம் அடையாளம். தமிழ் வளர்ச்சி என்பது அயலகத் தமிழர்கள் தமிழ் கற்பதிலும் பயிற்றுவிப்பதிலும் படைப்பாளியாவதிலும் இருந்துதான் தொடங்குகிறது.

அடுத்த தலைமுறைக்கு தமிழ் கடத்துவது என்பதை அங்குள்ள ஒவ்வொரு தமிழரும் தத்தம் கடமையாகவே கருத வேண்டும். அதற்கு ஆதாரமாக உங்கள் பணிகள் அமையட்டும்.

ஐரோப்பாவின் தமிழ் மலர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் பாடுபட்டு வரும் கழகத்திற்கு என் பாராட்டுக்கள்.

தமிழர் முன்னேற்றக் கழகத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உணர்வாளர்களைப் போற்றுகிறேன்.

உங்கள் பணிகள் தொய்வின்றித் தொடர வாழ்த்துகிறேன்.

அன்போடு...

வைரமுத்து

32, டைகர் வரதாச்சாரி சாலை, முதல் குறுக்குத் தெரு, கலாக்ஷேத்ரா காலனி, பெசன்ட் நகர், சென்னை – 600 090. ✆ 2491 4747

Adv. கு. செல்வப்பெருந்தகை, M.L.A.,
ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர்.
தலைவர்-சட்டமன்ற காங்கிரஸ் கட்சி.
தலைவர்-பொதுக் கணக்குக் குழு.
தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

எ.4G/15, 1-A,
பேராசிரியர் சுப்ரமணியம் தெரு,
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
மின்னஞ்சல் : selvaperunthagai@yahoo.co.in
அலைபேசி : 9840796094, 9444006616.

## தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா வாழ்த்துச்செய்தி

உலகத் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் தமிழினத்திற்கும் செம்மொழித் தமிழுக்கும் ஆற்றிய தொண்டை நினைவு கூரும் வகையில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை இலண்டனில் உள்ள தமிழர் முன்னேற்றக் கழகம் கொண்டாடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். நூற்றாண்டு பிறந்தநாள் விழா சிறப்புடன் அமைய எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தனிப்பெரும் அரசியல் ஆளுமையாகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள். அரசியல் உலகிலும், இலக்கிய உலகிலும், கலை உலகிலும் அவர் அளித்த பங்களிப்பைப் புறந்தள்ளிவிட்டு எந்த மனிதராலும் தமிழ்நாட்டின் வரலாற்றை எழுதிவிட முடியாது.

திருவாரூருக்குப் பக்கத்திலுள்ள திருக்குவளைக் கிராமத்தில் 1924 ஜூன் 3 அன்று முத்துவேலர்-அஞ்சுகம் தம்பதியின் மூன்றாவது குழந்தையாகப் பிறந்து, எந்தப் பின்புலமுமில்லாமல் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். தன்னுடையக் காந்தச்சொற்களாலும், கடும் உழைப்பாலும், உலகத் தமிழர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர். 1996 முதல் இந்தியப் பிரதமர்களை உருவாக்குவதில் தவிர்க்க முடியாத சக்தியாகத் திகழ்ந்தவர் கலைஞர் அவர்கள்.

பேசத் தெரிந்தவர்களுக்கு எழுதத் தெரியாது. பேசவும் எழுதவும் தெரிந்தவர்களுக்கு மக்கள் நலன் சார்ந்து சோர்வறியாமல் உழைக்கும் உள்ளம் இருக்காது. அளப்பரிய பேச்சாற்றல், வியக்கத்தக்க எழுத்தாற்றல்,

Adv. கு. செல்வப்பெருந்தகை, M.L.A.,
ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர்.
தலைவர்-சட்டமன்ற காங்கிரஸ் கட்சி,
தலைவர்-பொதுக் கணக்குக் குழு,
தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

நெ.4G/15, 1-A,
பேராசிரியர் சுப்ரமணியம் தெரு,
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
மின்னஞ்சல் : selvaperunthagai@yahoo.co.in
அலைபேசி : 9840796094, 9444006616.

சோர்வறியா கடும் உழைப்பு ஆகியவற்றின் பூரண வடிவமாகத் தன்னைத் தானே செதுக்கிக் கொண்ட அபூர்வமான தலைவர் கலைஞர் அவர்கள்.

மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு என்று வாய் மலர்ந்த அறிஞர் அண்ணாவின் வழியில், திறமையுள்ளவர்கள் தனக்கு எதிர் வரிசையில் நின்றாலும், அவர்களை அன்பால் ஆரத்தழுவி அரவணைத்துக் கொள்ளும் பரந்த மனம் கொண்ட கலைஞரைப் போல் வேறொருவரை அரசியலில் அவ்வளவு எளிதாகப் பார்த்துவிட முடியாது.

எழுபத்தைந்து ஆண்டுகள் இடைவிடாத பொதுவாழ்வுப்பணி, அறுபதாண்டுகள் சட்டப்பேரவையில் சரித்திர சாதனை, ஐம்பதாண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்டுமானம் கலைந்து விடாமல் காப்பாற்றியக் கட்சித் தலைமை, தேர்தல் காலங்களில் சூழலுக்கேற்ப அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்திய நேர்த்தி, தமிழின்பால் கொண்ட தனிப் பெருங்காதல், அவரது பேனா முனையில் பிரசவித்த இலக்கிய மணம் கமழும் வசீகரமான வார்த்தைகள், தமிழினத்திற்காகவும், சமூக நீதிக்காகவும், சாமான்யர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகவும் அவர் ஆற்றிய அரும்பணிகள் ஆகிய அனைத்தும் இந்த மண்ணில் கடைசித் தமிழர் உள்ளவரை மறவாமல் காலத்தால் போற்றப்படும். அவரது புகழ் என்றென்றும் பாடப்படும்.

கு.செல்வப்பெருந்தகை B.A.B.L., M.L.,
ஸ்ரீபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர்,
தலைவர்- சட்டமன்ற காங்கிரஸ் கட்சி,
தலைவர்- பொதுக் கணக்குக் குழு,
தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

## கலைஞர் 100

தமிழினத் தலைவர் மறைந்த நம் முன்னாள் முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவைத் தமிழர் முன்னேற்றக் கழகம் கொண்டாடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

செம்மொழியாம் தமிழுக்கு அணிகலனாய் இயல், இசை, நாடகம் என முத்தமிழ்ப் படைப்புகளை அணிவித்து அழகு பார்த்த அறிஞருக்கான விழா இது.

சங்கத்தமிழ், திருக்குறள் உரை, பொன்னர் சங்கர், ரோமாபுரி பாண்டியன், தென்பாண்டிச் சிங்கம், வெள்ளிக்கிழமை, நெஞ்சுக்கு நீதி, இனியவை இருபது, குறளோவியம் என இன்னும் பலநூறு நூல்களைத் தமிழுக்கு பங்களித்துப் பாதுகாத்த பகலவனுக்கான விழா இது.

களம்பல கண்டு, நமக்கான நலம் பல புரிந்த காவிரித்தாயின் கலைமகனான கலைஞருக்கான விழா இது.

சமூக நீதி, சமத்துவம், இனமொழிப்போர், சுயமரியாதை எனச் சொல்லில் விவரிக்க இயலாத பயன்களைப் பல்வேறு தருணங்களில் வழங்கிய பாசமிகு தலைவருக்கான விழா இது.

இவ்விழா சிறக்க வாழ்த்தி, இம்மலரைச் சிறப்பாக்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நன்றி பாராட்டுகின்றேன்.

**அ. அன்பரசு**
பொருளாளர்
**தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்**
**திருவள்ளுவர் தமிழ் பள்ளி**

# கலைஞர் ஓர் ஒளிவிளக்கு!

**- சுப. வீரபாண்டியன்**

மான்செஸ்டரில் ஒரு கூட்டத்தில் சந்தித்த ஒரு நண்பரைப் பார்த்து, "கடல் தாண்டி வந்த பிறகும், கலைஞரை எப்படி இன்னும் நினைவில் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டேன். "நான் கடல் தாண்டி வந்ததே கலைஞரால்தானே" என்றார் அவர்.

அப்படியா என்று வியப்பு மேலிட அவரை பார்த்தேன். அவர் பெயர் சரவணபவன். அவர் அந்தச் செய்தியை எடுத்துச் சொன்னார்.

படிக்கும் காலத்தில் அவர் ஒரு பாடத்தில் 114 மதிப்பெண்கள்தான் பெற்றிருந்தாராம். அப்போது தகுதி பெறுவதற்கான தேவை 120 மதிப்பெண்கள் என்று இருந்ததாம். அந்த நேரத்தில்தான், தலைவர் கலைஞர் அவர்கள் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்னும் வகுப்பினை உருவாக்கி, அவர்களின் உரிமையை வழங்கி இருக்கிறார். அதன் விளைவாக 112 மதிப்பெண் எடுத்தவர்களுக்கே மேலே படிக்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அந்த வாய்ப்பைப் பயன்படுத்திப் படித்து மேலே வந்து, அடுத்தடுத்த படிப்புகளையும் மேற்கொண்டு, இன்றைக்கு இங்கிலாந்தில் ஒரு பெரிய பொறுப்பில் நான் இருக்கிறேன் என்று கூறினார்.

இப்படி எத்தனையோ பல்லாயிரக்கணக்கானவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றியவர் தலைவர் கலைஞர்! திட்டக்குடி செந்தில் என்னும் ஒரு மருத்துவர், கலைஞரால் தான் வாழ்வில் பெற்ற முன்னேற்றத்தை ஒரு சிறு நூலாகவே எழுதி இருக்கிறார்.

நன்றி உடையவர்கள் நாடெங்கும், உலகெங்கும் இருக்கிறார்கள் என்பதை இந்நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

தமிழர் முன்னேற்றக் கழகம் மற்றும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் தமிழன்பு கொண்ட பெருமக்களால் இலண்டனிலும், ஜூன் 10ஆம் தேதி தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றனர். நண்பர் அன்பழகன் உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்களுக்கும் விழாக் குழுவினருக்கும் என் அன்பையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

மலரும், விழாவும் சிறக்கட்டும்!

## முத்தமிழின் முழுவடிவம் கலைஞர்

**முனைவர் மு. இளங்கோவன்**
தமிழ்த்துறை,
கா. மா. அரசு பட்டமேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
புதுச்சேரி - 605 008, இந்தியா
muetamil@gmail.com

தமிழகத்தின் அரசியல் வரலாற்றிலும் கலை, இலக்கிய வரலாற்றிலும் பொன்னெழுத்துகளால் பொறிக்கத்தகுந்த பெயராக முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பெயர் அமைந்துள்ளது. இளம் அகவையில், தமிழ்ப் பற்றும், இன உணர்வும் கொண்ட மாணவராக விளங்கி, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா உள்ளிட்ட தலைவர்களோடு பழகித், தமிழகத்தை வழிநடத்தும் ஆளுமையாக மலர்ந்தவர். பாவேந்தர் பாரதிதாசனாரின் கவிதைகளைத் தம் நெஞ்சத்துள் சுமந்துகொண்டு, கலைநெஞ்சம் கொண்ட கழகப் புலவராகத் தமிழக அரங்குகளில் தமிழ் வளர்த்த பெருமைக்குரியவர். அரசியலில் தமிழகத் தலைவர்களையும் இந்தியத் தலைவர்களையும் உலகத் தலைவர்களையும் வியக்கச் செய்த ஆற்றலுடையவர். இவர்தம் நினைவாற்றலும், எதிரிகளின் அரசியல் சூழ்ச்சிகளைத் திறம்பட முறியடிக்கும் வினையாண்மையும் இவரை உலகத் தலைவராக உயர்த்தியது.

முத்தமிழிலும் முழுத்திறன் பெற்றிருந்த கலைஞர் அவர்கள் எழுத்தாலும், பேச்சாலும் இளைஞர்கள் நடுவே பெரிதும் மதிக்கப்பட்டவர். திரைப்படத்துறையில் இவர்தம் நுழைவு நல்ல தமிழுக்கு நடைதிறந்தமை போன்று அமைந்தது. அனல் கக்கும் உரையாடல்களாலும், அடுக்குமொழித் தமிழ்ப் பயன்பாடுகளாலும் முன்மாதிரி உரையாடல் ஆசிரியராகத் திரைத்துறையில் போற்றப்பட்டவர். இவர்தம் பேச்சுத் தமிழை இவரின் அரசியல் எதிரிகள்கூட ஆர்வத்துடன் செவிமடுத்தனர்.

தமிழ் இலக்கணம், இலக்கியம் இவற்றைத் தமிழ் மக்களிடையே எளிய வடிவில் அறிமுகம் செய்துள்ள பாங்கறிந்து ஒவ்வொரு தமிழ் மகனும் கலைஞர் அவர்களை நன்றியுடன் போற்ற வேண்டும். இவரின் குறளோவியம், தொல்காப்பியப் பூங்கா, திருக்குறள் உரை, சங்கத்தமிழ், பொன்னர் சங்கர், தென்பாண்டிச் சிங்கம், பாயும் புலி பண்டாரக வன்னியன் முதலிய நூல்கள் தமிழுள்ளவரை நின்று கலைஞர் அவர்களின் புகழ்பரப்பும். அரசியல், இதழ்ப்பணி, திரைப்படம், புதினம், சிறுகதை, மேடைப் பேச்சு, கவிதை, உரை, தன்வரலாறு, மடல் இலக்கியம், கலைக்கூடங்களை நிறுவியமை என்று பல்வேறு துறைகளில் முத்திரை பதித்தவர். எழுதுவதும் படிப்பதும் இவரின் ஈடுபாடான துறைகளாக இருந்தன.

அரசியலில் ஈடுபட்டுத், தமிழ் மொழி, தமிழ் மக்கள் மேம்பாட்டுக்காகப் பல்வேறு போராட்டங்களில் களம்கண்டவர்; சிறை சென்றவர். இந்தி எதிர்ப்புப் போரிலும் கல்லக்குடி தொடர்வண்டி மறியல் போராட்டத்திலும் இவர்தம் ஈகம் இன்றும் போற்றத்தக்கதாக அமைந்துள்ளது. நெருக்கடிநிலைக் காலத்தில் "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்" அருகிலிருந்தவர்கள் அகன்றபொழுதும் அஞ்சாமல் அரசியல் பணியாற்றியவர். முரசொலியில் எழுதியவர். இந்தி எதிர்ப்புக்கு என்றும் குரல்கொடுத்தவர். "மாநிலத்தில் சுய ஆட்சி; மத்தியில் கூட்டாட்சி" என்பதில் உறுதியாக இருந்தவர்.

தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தபொழுது இவர் சமூக நீதி நோக்கிலும், தன்மான நோக்கிலும் கொண்டுவந்த பல்வேறு சட்டங்களும் திட்டங்களும் இவரின் பெருமையை என்றும் நினைவுகூரும். பெரியார் சமத்துவபுரம், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீடு, டைடல் பூங்கா, சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்டப் பாதுகாப்பு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், கண்ணொளித் திட்டம், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் திட்டம், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத்திட்டம், அண்ணா நூற்றாண்டு நூலகம், அண்ணா அறிவாலயம், கோயம்பேடு பேருந்து முனையம், வள்ளுவர் கோட்டம், திருவள்ளுவர் சிலை, பூம்புகார் புனரமைப்பு, உழவர் சந்தை, அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், செம்மொழி மாநாடு என்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்க செயல்பாடுகளால் கலைஞர் என்றும் நினைவுகூரப்படுவார்.

தமிழுக்கும் தமிழர்க்கும் தம் வாழ்நாளெல்லாம் உழைத்த முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டினைத் தமிழகம் கொண்டாடத் திட்டமிட்டு வரும் நிலையில் இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம், இலண்டன் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியின் அன்பர்கள் இணைந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடுவதையும் சிறப்பு மலர் வெளியிடுவதையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். தமிழகத்தின் கல்விப் புலங்களிலும், அயல்நாட்டுத் தமிழ் அரங்குகளிலும் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தமிழ்ப்பணிகள் நினைவுகூரப்படவேண்டும். அடுத்த தலைமுறையினர்க்குக் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பெருமைகளையும் தொண்டுகளையும் கொண்டுசேர்ப்பது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்.

கலைஞரின் பெருமையுரைக்கும் சிறப்பு மலர் செந்தமிழ் மணம் பரப்ப, என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகள்.

மு. இளங்கோவன்

23.05.2023

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி

தமிழர் வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்றுள்ளவர் மதிப்பிற்குரியவர் கலைஞர் மு கருணாநிதி ஆவார். கலைஞர் அவர்கள் தமிழன்னையைக் கவிதைகளால், இலக்கியத்தால், நாடகங்களால் திரை வசனத்தால் அலங்கரித்து மகிழ்ந்தவர்.

தமிழுலகத்தை மகிழ்வித்தார்; உயிரூட்டினார்; தன்னிகரற்ற தன் பேச்சாற்றலால் தமிழ் நெஞ்சங்களைத் தன்பால் ஈர்த்தார். பல கவிஞர்களை உருவாக்கினார், கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் "தமிழ்ப் பாலூட்டி என்னை வளர்த்தவர் கலைஞரே" என்று குறிப்பிட்டிருந்தார். இப்படி எத்தனையோ கவிஞர்கள் உருவாகியிருக்கலாம். தமிழின் சுவையை உணர்ந்த தமிழ் அறிஞர்களாகியிருக்கலாம். இவ்வாறு தமிழரின் மேன்மையைத் தமிழின் தொன்மையைத் தமிழின் சுவையைத் தமிழுலகம் அறிந்து பயனுற வழிகாட்டியவர் கலைஞரே என்றால் மிகையல்ல.

இவையெல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தமைபோல உலகப் பொதுமறையாகிய தெய்வத் திருநூலாகிய திருக்குறளை மக்கள் தவறாது கற்றுப் பயனுறவேண்டி, உன்னத நோக்கோடு தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்து, அதில் 1330 குறட்பாக்களையும் தெளிவாகப் பதிப்பித்துள்ளார். முக்கடல் கூடும் கன்னியாகுமரியில் வள்ளுவனுக்கு 133 அடியில் கற்சிலை நிறுவி, உலகம் அதிசயிக்குமாறு செய்தவர். அதுமட்டுமின்றித் திருக்குறளுக்குச் சிறந்த குறளோவியமும் எழுதியுள்ளார். அரிதான மனிதப் பிறவியை மக்கள் பயனுற வாழவேண்டும் என்ற உயரிய நோக்குடன் ஆற்றிய இந்தப் பணிகளுக்காகத் தமிழர்கள் அனைவரும் அவரைப் போற்றிப் பாராட்டிக் கொண்டாட வேண்டும்.

கலைஞரின் தமிழ்த்தொண்டு அளப்பரியது. மிக இளம் வயதிலேயே எழுத ஆரம்பித்தவர். தந்தை பெரியாரின் கொள்கைகளை உள்வாங்கி எழுதியவர். அறிஞர் அண்ணாவால் நெறிப்படுத்தப்பட்டவர். பாவேந்தரின் உணர்வுகளை நெஞ்சில் சுமந்தவர். அவரது கதை வசனங்கள் அன்று படிக்காத பாமர நெஞ்சங்களையும் சென்றடைந்தது என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும்.

பாவேந்தரின் பாடல்கள் அறியாமையில் மூழ்கியிருந்த தமிழினத்தைத் தட்டி எழுப்பிய தென்றால் கலைஞரின் எழுத்தாற்றலும், பேச்சாற்றலும் தமிழரின் விழிப்புணர்வைத் தூண்டியது; தமிழின் சுவையை மக்கள் அறிய வைத்தது. மாண்புறு கலைஞரை மனதார வாழ்த்துவோம்.

**திருவாட்டி தவமணி மனோகரன்**
தலைமை ஆசிரியை
**திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி, இலண்டன்**

## Tribute to Kalaignar M. Karunanidhi

What comes to our mind when we hear Kalaignar Muthuvel Karunanidhi is his political involvement and his passion for Tamil literature and Tamil culture.

In fact, it was the other way around. His plays were noticed for its sharp wit, powerful dialogues, clever narrative and strong political undertones.

His well-known playwright introduced him to the big screen as a screenwriter. As a poet his 1$^{st}$ play was staged in 1940, titled "Palaniappan" however, the most popular classic being Manthiri Kumari, which the lead role was played by M G Ramachandran.

His writings included Thooku Medai, Manamagal, Mani Magudam, Parasakthi, Kagitha Poo, Ore Ratham, Nanne Arivali, Vellikizhamai, Udayasooriyan, and novel Silapathigam and much much more!

His book Thenpandi Singam won him an award "Raja Rajan Award" from Thanjavur University. Some of his scripts and play writes were dissemination to his political career during his lifetime.

How passionate one has to be to have been one of the most successful politicians of Tamil Nadu for 6 decades and be a poet and a writer at the same time! His contribution to Tamil and Tamil literature and culture is unparallel to none and his work will be missed. There are not many people in the world who made a mark in life leaving such rich legacy both in the literary world and the political scene.

We thank him with both our hands for being part of us and in particular during our lifetime.

**Saraswathi Ramiah**
Secretary
**Thamizhar Munnetra Kazhagam – London**
**Thiruvalluvar Tamil School**

# நன்றி பாராட்டி இலண்டனில்
# கலைஞர்க்கு நூற்றாண்டு விழா !

## உலகத் தமிழரெல்லாம் நூற்றாண்டு விழாக் காண்பீர்!

**- பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன்**

உலகத்தின் மூத்தகுடி ஒளிமல்கும் தமிழ்க்குடியே
உலகத்தின் மூத்தமொழி ஒண்டமிழே!
பல்கற்றே பல்லாண்டு பல்லாண்டின் முன்பேதான்
பன்னூறு கருத்துவளம் பண்பாட்டை
நிலம்பெற்றே அறிவாண்மை நெறிஒழுக்கம் காதல்வீரம்
நிறைஅன்பின் வழிதமிழர் வழியே தான்
நலம்கெட்டே மூவேந்தர் நன்றாட்சி, வீழ்ச்சியுற்றே
நாமிழந்தே சிதறுண்டோம் வன்கண் மையால்!

சிதறடித்தே பன்னாட்டார் சீரழித்தார் தமிழினத்தை
**திராவிட நம்இயக்கத்தார்** திறம் மறத்தால்
முதன்மைதமிழ் தமிழினத்தை மூண்டெழுந்த இயக்கதாலே
முதிர்அறிவுத் தந்தை பெரியார் அறிஞரண்ணா
இதயத்தின் எழுச்சிமிகு எரிமலைகள் வெடித்ததைப் போல்
இடர்செய்தார் பகைமைகள் இடிகள் வென்று
உதயசூரியன் ஒளியை உதிக்கச்செய் கழகத்தாலே
உடன்பிறப்பாய்ப் பாதுகாத்தார் கலைஞரன்றோ!

தமிழ்நாடு எனும்பெயரை தகைமைசால் அண்ணாகண்டார்
தாயகத்தை ஒன்றியத்தின் இந்தியத்தார்
உமிபோலத் தமிழர்களை ஊதியேவெல் கொள்கையேந்தி
உறுதியுடன் நிமிர்ந்து பகைமை கலைஞர்வென்றார்!
தமிழ்தமிழர் அடிமையால் தலைமையின் மொழிநாடென்னும்
சங்கூதி முழக்கமிட்டே ஒன்றியத்தார்
திமிரடக்கி தமிழ்த்தேச சிறப்பிற்கே மீட்சிதந்தார்
**செந்தமிழர் மானம் காக்கும் கலைஞரேறே!**

அரிமாபோல் முன்பின்னும் அறிந்து பார்த்த ஆளுமைக்கோ
அன்றிலன்பாய் தமிழ்மக்கள் நெஞ்சமர்ந்தார்
உரிமைகளை தமிழர்பெற உயிர்மூச்சுக் காற்றானாரே!
உயர்கழகம் தமிழர் அரண்தனைச் சிதைக்க
வரிந்து கட்டி வந்தவரை வரிப்புலியின் சினத்ததனால்
வலிமைகோ கலைஞர்தான் தி.மு.க. காத்தார்!
விரிமாசில் மனத்தாலே வென்றதனால் இன்றோ நம்
வெற்றிமுரசாய் இஸ்டாலின் ஆட்சி கண்டோம்!

நூற்றாண்டே எட்டும்வரை கலைஞர்தாம் ஆட்சி தந்தார்
    நோற்றுநோற்றுத் தமிழ்தமிழர் வாழச் செய்தார்!
வேற்றுமைகள் வேண்டாத வீண்வம்பை விரட்டிஆக்கம்
    வெற்றிதமிழ் நாடுயர்த்தி மாட்சி தந்தார்
மாற்றாரும் போற்றுவகை மாந்தநேயம் தமிழ்நாட்டில்
    மறுமலர்ச்சி கண்டார் யார்? கலைஞரைப் போல்!
கூற்றுவனோ கலைஞருயிர் கொண்டானெனில் அவனைவென்றுக
    குவலயத்தில் புகழுருவாய் உயிர் வாழ்கின்றார்!

கலைஞர்தமிழ்ப் பரம்பரைக்கே தந்தகொடைகளுள்ளே இன்று
    காண்பரிய சமநீதி எல்லோர்க்கெல்லாம்
விலைமதிக்க முடியாதவெல் முதல்வராய் ஆட்சிசெயும்
    **வீரமிக்க மு.க. இஸ்டாலினைத்** தந்த கொடைதான்!
தலைமைத்து வம்ஆகும்! **தமிழ் முன்னேற்றக் கழகம் இலண்டன்**
    தகைமை நூற்றாண்டுவிழா கொண்டாடல் சுயமரியாதை
மலைநிகர்த்த **மாக்கலைஞர்க்கு** மாவுலகத் தமிழரெலாம்
    **மாண்புநூற் றாண்டுவிழாக் காண்பீர்!** நன்றே!


அன்புப் பெருந்தகையர் இர. அன்பழகனார்க்கு வணக்கம்!
கணக்கில! வாழி! நீடுழி!

நினைவு கூர்ந்தமைக்கு மிக்க நன்றி. நம் மூத்த உடன்பிறப்பு நாகதேவன் உள்ளிட்ட அனைத்து நம்மவர்களுக்கும் இளைஞர்கட்கும் என் வணக்கம் வாழ்த்துக்களைக் கூற வேண்டுகிறேன்.

மீண்டும் நன்றி! நன்றி!

**<u>தொடர்பு முகவரி</u>**

சேது கவிஅரசன் இல்லம்,
10/2, ஆஞ்சநேயர் அடுக்ககம்,
தாராசந்த் நகர் பிரதான சாலை, சாலிகிராமம்
விருகம்பாக்கம், சென்னை - 600 092.
அலைபேசி : 72997 67525



## சாதனை படைத்த சரித்திரம் காணீர்! வேதனை தீர்த்த வேந்தரைப் போற்றீர்!

'இலக்கிய மாமணி'
**புலவர் முனைவர் இரா.கலியபெருமாள்**
'பொன்னி'
இராவுசாப்பட்டி, தஞ்சாவூர் - 613 403.
கைப்பேசி : 99525 38484.

### தமிழ் வாழ்க!

**குடிசை மாற்று வாரியம்; குடிநீர் வடிகால் வாரியம்;**
**கண்ணொளி வழங்கும் திட்டம்; கை ரிக்ஷா ஒழிக்கும் திட்டம்;**
**மக்கள் குறை போக்க மனுநீதித் திட்டங்கள்;**
**இரவலர் மறுவாழ்வு : ஏதுமற்றோர் புனர்வாழ்வு;**
**ஊனமுற்றோர் நலவாழ்வு; ஒடுக்கப்பட்டோர் முன்னேற்றம்;**
**எண்ணற்ற வாரியங்கள் : ஈடற்ற நற்சலுகை;**
**ஏழைப் பெண்ணுக்குத் திருமணம்; இலவசத்தில் மின்சாரம்;**
**கலப்புத் திருமணம் ; கைம்பெண்ணுக்கு மறுமணம்;**
**பெண்ணுக்குச் சமஉரிமை; பெண்களுக்கு வேலை வாய்ப்பு;**
**காவேரி நடுவர் மன்றம்; கடைக்கோடி கிராம மாணவர்களுக்குத்**
**தொழில் படிப்பில் 15%-;**
**சாதியை ஒழிக்கச் சமத்துவபுரம்; சமரசங்காண அர்ச்சகர் திட்டம்;**
**அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; அய்யன் வள்ளுவர்க்குக் கோட்டம் ;**
**நமக்கு நாமே திட்டம்; நகர்கள் எங்கும் உழவர்கள் சந்தை;**
**குமரியிலே வள்ளுவர்க்குச் சிலை; கோட்டையிலே கொடியேற்றும் உரிமை;**
**வருமுன் காப்போம் திட்டம்; வகை வகையான பல்கலைக் கழகம்;**
**வறியவர்க்கெல்லாம் கல்வி நீரோடை வளமாய்ப்**
**பாய்ந்திட வாய்ப்பான திட்டங்கள்;**
**சேலம் உருக்காலை : சிறப்பான தொழில் நுட்பப் பூங்காக்கள்;**
**நெய்வேலியில் இரண்டாம் சுரங்கம்; நெசவாளர்க்குப் பெரும் சலுகை;**
**தூத்துக்குடியிலே உரத்தொழிற்சாலை; துரத்தப்பட்டோர்க்கு மீண்டும் சாலைப் பணி ;**
**மாணவர்களுக்கு இலவசப் பேருந்துப் பயணம்; இலவசப் பாடநூல்;**
**சிற்றூர்க்கெலாம் சிறுபேருந்துகள்;**

மதராஸ் சென்னையானது; மாநிலம் தமிழ் நாடானது;
அண்ணா வழி நின்று அரசு ஊழியரை அன்னையாய் அணைத்தார்;
போக்குவரத்துக்கள் பொதுவுடைமை; போலீஸ் நலம் காக்க விசேடக் குழுக்கள்;
சான்றோர்க்கெல்லாம் அஞ்சல் தலைகள்; தமிழ்ச் சான்றோர்க்கு மணி மண்டபங்கள்;
சான்றோர் நூல்கள் நாட்டுடைமை; தகுதி வாய்ந்தோர்க்குப் பல விருது;
மாணவர்க்கு முட்டையுடன் வளமான சத்துணவு;
மகளிர்க்கெல்லாம் நலக் குழுக்கள்; ஆடவர்க்கும் அதுபோன்ற குழுக்கள்;
ஆலயமெல்லாம் செந்தமிழ் முழக்கம்; அன்னைத் தமிழுக்குச் செம்மொழித் தகுதி;
ஆரம்பக் கல்வியில் தமிழ்மொழிக் கட்டாயம்;
சேதுவுக்கு என ஒரு திட்டம்; சினிமாவுக்குப் பலப்பல சலுகை;
சிங்காரச் சென்னையில் சிறப்பான தொழிற்சாலைகள்;
சாலைகள் எங்கும் மேம்பாலம்; சர்க்கரைக்குக் கூட்டாலை;
கற்பரசி கண்ணகிக்கும் கலைக்குரிசில் கணேசனுக்கும் கடற்கரையில் சிலைகள்;
கிடப்பில் கிடந்த கோப்புகள் எல்லாம் கிளர்ந்து எழுந்தன;
இரண்டு ரூபாய் கிலோ அரிசி; இருண்ட உழவர் வீட்டில் கடன் தள்ளுபடி தீபம்;
எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி;
ஏழை மக்கள் குடியிருக்க வீடும்; உழுது பிழைக்க நிலமும்;
கருவுற்ற பெண்கள் முதல் கருவுயிர்த்த பெண்கள் வரை கருவில் வளர் சிசுக்கள்
முதல் காடுசெல்லும் கிழங்கள் வரை அனைவருக்கும் இலவச உதவிகள்;
"சாலை ஓரத்திலே வேலையற்றதுகள், வேலையற்றதுகளின் உள்ளத்திலே
விபரீத எண்ணங்கள்.வேந்தே! அதுதான் காலக்குறி!"என்ற அண்ணாவின் உரையை நெஞ்சிலே தாங்கி,
படித்துவிட்டு வேலையின்றி இருப்போருக்கு நிதி உதவி—பயிலும் மாணவரின் படிப்புக்கு உதவித் தொகை;
இன்னும் இவை போன்ற எண்ணற்ற நற்சலுகை தந்தவர் கலைஞர்;
தருவது நம் ஆட்சி;
சாதனை தொடர்ந்திட வேதனை விலகிட சிங்க இளைஞனே!
செந்தமிழ் மறவனே! சிலிர்த்தெழு! செயல்படு !
வென்றிடு! வினைமுடி!

CROYDON
www.croydon.gov.uk
Council Members' Room
The Town Hall, Katharine Street
Croydon, CR0 1NX
Tel: 07833 683475


நாள்: **24.05.2023**

திருமிகு இர அன்பழகன் அவர்கள்
தலைவர், தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்,
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி.

அன்புடையீர் வணக்கம்.

**கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்வியைத் தவிர மற்ற பொருள்கள் செல்வம் அல்ல. அத்தகைய செல்வத்தைத் தாய்மொழியில் அரை நூற்றாண்டுக் காலமாக இங்கிலாந்து நாட்டில் நம் இனத்தவர்களுக்குக் கற்பித்து வரும் திருவள்ளுவர் பள்ளித் தோழர்களின் சமூக சேவையைக் கண்டு வியந்து நிற்கின்றேன்.

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"** என்பது பாரதி வாக்கு.

மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியான நம் தாய்மொழியாம் தமிழ் மொழியானது தொன்மையையும் சிறப்பையும் தன்னகத்தே கொண்ட இலக்கிய வளம் பொருந்திய செம்மொழியாகும்.

செம்மொழித் தமிழுக்கும், தமிழினத்திற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆற்றிய அரும்பணியைப் பாராட்டி, நூற்றாண்டு விழா எடுக்கின்ற இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத் தோழர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

நன்றி

கவுன்சிலர் அப்பு தாமோதரன் சீனிவாசன்
குராய்டன் நகரத் துணை மேயர்

# கலைஞர் எனும் ஆளுமை

என் உள்ளத்தில் என்றும் அழியா ஓவியமாய் நிலைத்துவிட்ட என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே என விளித்து, வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும் என எங்கள் எண்ணங்களில் ஏற்றி, முடித்தே தீருவோம் என்பதே வெற்றிக்கான துவக்கம் என பண்படுத்தி ஓயாமல் உழைக்க வித்திட்ட ஓய்வறியாச்சூரியன் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன், ஈடுபட்டிருப்பதை ஒரு தமிழ்த் தொண்டாகக் கருதுகின்றேன்.

தாழ்ந்தாலும் தமிழன் தன்மானம் இழந்து தன் தலையை மட்டும் தாழ்த்த மாட்டான் என்ற நம்பிக்கையை நமக்குள்ளே விதைத்து விளிம்பு நிலை மனிதர்கள் என்ற நிலை இல்லாது சுயமரியாதையைப் போற்றி, இட ஒதுக்கீடு தந்து, மனிதச்சமூகத்தின் சமத்துவம் பேணி ஒரு 50 ஆண்டு காலத் தலைவராக நம் வாழ்க்கை நிலையை மாற்றிக்காட்டிய புரட்சியாளர்.

காலத்தால் அழியாத காவியங்களைப் படைத்த தலைசிறந்த எழுத்தாளர்-வங்கத்து அலைபோல்ஆர்ப்பரித்து ஆரத்தழுவும் சிங்கக் குரலுக்கு சொந்தமான சொற்பொழிவாளர் - கருத்துப் பரிமாற்றங்களின் போது லாவகமாக தமிழைக் கையாளும் இலக்கியவாதி - தன் வாழ்நாளில் ஒரு முறைகூட தேர்தலில் தோற்காதவர் - ஆளுங்கட்சியாக இல்லாத போதிலும் கட்சியை கட்டிக்காத்து தன்ஆளுமையை ஒரு போதும் விட்டுக்கொடுக்காதவர்.

தமிழ்த்தாயின் தலைமகன் இந்நூற்றாண்டின் ஒப்பற்ற ஒரே தலைவன் விட்டுச் சென்ற பணிகளைத் தொய்வில்லாமல் தொடர்ந்து நினைவு கூர்ந்து அதன் வழி நடந்திட நடத்திட தமிழ் கூறும் நல்லுலகம் நன்றிக்கடன் பட்டிருக்கும் இவ்வேளையில் அவருடைய நூற்றாண்டு விழா சீரும் சிறப்புமாக வெற்றி பெறவாழ்த்துகிறேன்

**ப. கோவிந்தராசன்**
துணைச் செயலாளர்
**தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்**
**திருவள்ளுவர் தமிழ் பள்ளி**

OM MURUGA

இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

LONDON SRI MURUGAN TEMPLE

Registered Charity No: 1190790

78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF

TEL: 020 8478 8433

Email: admin@londonsrimurugan.org | www.londonsrimurugan.org

BOARD OF TRUSTEES

ADVISORY TRUSTEES
Mr. R.C.A. Anpananthar
Mr. P. Dakshinamoorthy
Mrs. S. Krishnasamy
Mrs. P. Raguvaran
Mr. S. Sampathkumar

TRUSTEES

PRESIDENT
Mr. G. Ramadass

VICE PRESIDENT
Mr. R. Renganathan
Miss. V Thambyrajah

SECRETARY
Mrs. P. Sekar

ASST. SECRETARY
Mr. A. Ramanathan

TREASURER
Mr. G. Sathiamoorthy

ASST. TREASURER
Mr. R. Panneerselvam

Mr. A. Gopal
Mrs. M Gopalanathan
Mr. I. Muthu
Mr. G. Nagarajan
Mr. R. Narayanan
Mr. G. Poominathan
Mrs. L. Rajagopalan
Mrs. R. Ramachandran
Mr. R. Ramasamy
Mrs. R. Sekaran
Mr. M. Sivam
Mr. P. Sivasubramanian
Mr. M. Thenappan
Mr. P. Uthayakumar

## கலைஞர் 100

தமிழ் அறிஞர் தமிழ் மொழியை செம்மொழியாக்கிய நமது தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களின் 100ஆம் ஆண்டு அகவைத் திருநாளை நமது தமிழர் முன்னேற்ற கழகம் இலண்டன் மாநகரில் விழா எடுப்பது அறிந்து இலண்டன் ஸ்ரீ முருகன் கோவில் அறங்காவலர்களாகிய நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.
தான் நாத்திகராக இருந்தாலும் அனைவருடைய மத நம்பிக்கையும் மதித்து நடந்தவர்தான் நமது கலைஞர். அதற்கு தனி சிறந்த சான்றாக பல நிகழ்வுகள் உள்ளன, என்றாலும் அதில் சிலவற்றை மட்டுமே இங்கே எடுத்துரைத்தல் பொருத்தமானதாக இருக்கும் என்று நினைக்கின்றோம். நினைக்கிறேன்.

முதலாவதாக கூற விரும்புவது, 1948ஆம் ஆண்டு முதல் 25 ஆண்டுகளாக திருவீதியுலா காணாத எழில்மிகு திருவாரூர் தேரை, சீரமைத்து 1970ஆம் ஆண்டு தனது ஆட்சி காலத்தில் திருவீதியுலா காணச்செய்தவர் நமது கலைஞர் அவர்கள்.

வான்புகழ் வள்ளுவனுக்கு புகழ் சேர்க்கும் வகையில், சென்னையில் அமைக்கப்பட்ட வள்ளுவர் கோட்டமானது கண்கவரும் திருவாரூர் தேரின் வடிவத்திலேயே அமைக்கப்பட்டது. திராவிட கட்டிடக்கலை மீது தீராத காதல் கொண்டிருந்த கலைஞர் அனைத்து மூட நம்பிக்கைகளையும் உடைத்தெறிந்து தஞ்சை பெரியகோயிலுக்கு சென்றுவந்தார். தஞ்சை பெரிய கோவிலின் ஆயிரமாவது ஆண்டு விழாவின் போது நடைபெற்ற 1000 நபர்கள் கலந்துகொண்ட நாட்டிய விழாவில், கலைஞர் அவர்கள் நமது தமிழ் பாரம்பரிய உடையான பட்டு வேட்டி சட்டையில் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. எப்பொழுதும் கருப்பு சிவப்பு கரை வேட்டி அணியும் கலைஞரின் பட்டு வேட்டி சட்டை குறித்து பத்திரிக்கையார்கள் வினவுகையில் இது எங்கள் ஊர் திருவிழா அதற்காக தான் அணிந்து வந்தேன் என மனநெகிழ்ச்சியுடன் கூறினார். இது நெற்களஞ்சியமாம் தஞ்சை மீது அவர் கொண்டிருந்த தீராத பற்றையும், மாமன்னர் ராஜராஜ சோழர் மீது வைத்திருந்த நன்மதிப்பையும் வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

OM MURUGA

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்
# LONDON SRI MURUGAN TEMPLE

Registered Charity No: 1190790
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON, E12 6AF
TEL: 020 8478 8433
Email: admin@londonsrimurugan.org | www.londonsrimurugan.org

**BOARD OF TRUSTEES**

**ADVISORY TRUSTEES**
Mr. R.C.A. Anpananthar
Mr. P. Dakshinamoorthy
Mrs. S. Krishnasamy
Mrs. P. Raguvaran
Mr. S. Sampathkumar

**TRUSTEES**

**PRESIDENT**
Mr. G. Ramadass

**VICE PRESIDENT**
Mr. R. Renganathan
Miss. V Thambyrajah

**SECRETARY**
Mrs. P. Sekar

**ASST. SECRETARY**
Mr. A. Ramanathan

**TREASURER**
Mr. G. Sathiamoorthy

**ASST. TREASURER**
Mr. R. Panneerselvam

Mr. A. Gopal
Mrs. M Gopalanathan
Mr. I. Muthu
Mr. G. Nagarajan
Mr. R. Narayanan
Mr. G. Poominathan
Mrs. L. Rajagopalan
Mrs. R. Ramachandran
Mr. R. Ramasamy
Mrs. R. Sekaran
Mr. M. Sivam
Mr. P. Sivasubramanian
Mr. M. Thenappan
Mr. P. Uthayakumar

தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கும் கலைஞர் அவர்களுக்கும் இருந்த நட்பு பல்வேறு தரப்பட்ட மக்களுக்கும் புரியாத புதிராகவே இருந்தது. குன்றக்குடி அடிகளார் பழுத்த ஆன்மீகவாதி கலைஞர் அவர்களோ நாத்திகவாதி. இருந்தாலும் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற அண்ணாவின் வார்த்தையைப்போல அவர்களது நட்பு அமைந்தது. குன்றக்குடி அடிகளாரைப்பற்றி கலைஞர் கூறும்போது அவர் சைவ நெறியை பின்பற்றினாலும் சமய வெறியையோ மற்ற மதத்தினர் மீது காழ்ப்புணர்ச்சியையோ காணாத மனிதர் என்று விவரிப்பார். இது மதத்தை கடந்து மனித நேயத்தை நேசிப்பவர் கலைஞர் என்பதை பறைசாற்றுகிறது. கலைஞர் தனது வயது முதிர்ந்த காலத்திலும் 400கும் மேற்பட்ட அத்தியாயங்களை எழுதி மதங்களில் புரட்சி செய்த இராமானுசரை பற்றி வெளிவந்த தொலைக்காட்சி தொடர் அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. இதுவே, அனைத்து மதத்தினரையும் ஒன்றெனவே நினைத்தார் என்பதற்கு சான்றாக அமைகிறது. இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக புட்டபர்த்தி சாய்பாபா அவர்கள் கலைஞரை அவரது இல்லத்திலேயே சென்று சந்தித்ததை கூறலாம். பல்வேறு முக்கியஸ்தர்கள் புட்டபர்த்தி சாய்பாபாவை காண தவம் கிடந்த நிலையில் யாருடைய இல்லத்திற்கும் செல்லாத அவர், கலைஞரது இல்லத்திற்கு சென்றார் என்பது கலைஞரது நல்துள்ளத்தை பிரதிபலிக்கிறது. "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டி குறுகத்தறித்த குறள்" என்று ஔவையாரால் புகழப்பட்ட வள்ளுவனுக்கு, முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் 133 அடி உயரம் கொண்ட சிலையை அமைத்து நீங்கா புகழ் கொண்டார்.

அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற புரட்சிகர திட்டத்தை சட்டமாக்கி சாதனை படைத்தவர் கலைஞர் அவர்கள். 2006 முதல் 2011 வரை நடைபெற்ற இவரது ஆட்சியில் 4724 கோவில்களில் திருப்பணிகள் நடைபெற்று குடமுழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றது. "அன்னைத்தமிழில் அர்ச்சனை" என்ற அற்புத திட்டத்தை தொடங்கி அனைத்து ஆலயங்களிலும் தமிழ் மணம் கமழச்செய்தவர்.

இங்ஙனம்
கோ.இராமதாஸ்
தலைவர்

இலண்டன் ஸ்ரீ முருகன் கோவில்
அறங்காவலர்கள் சார்பாக.

# இலண்டன் தமிழ்ச் சங்கம்
# The London Tamil Sangam

Tamil Community & Education Centre | Enriching Community Life. Driven by Values

Estd.1914 / Regd.1960

தேதி: 10/05/2023


**Board of Directors**

President
Mr. N. Kuttiyandisamy

Secretary
Mr. Uthayakumaran Arumugam

Treasurer
Mr. Vijay Sooriya

Vice Presidents
Mr. Sethurajan Balasubramanian
Mr. Vettrivel Ramasamy

Asst. Secretaries
Mrs. Nageshwari Moorthy
Mr. Shanmugha Sundaram Subramani

Asst. Treasurer
Mr. Krishna Kumar Somasundaram

Trustees:
Mr. Ratnam Sandanasamy
Mrs. Leela Radhakrishnan
Mrs. Mumtaj Moorthi
Mr. A. H. Sahabudeen
Mr. Rajesh Sivagurunathan
Mr. Chelliah Murugesan
Mr. Gopikrishna Govindarajan
Mr. Rajmohan Ramadasi
Mr. Sakthivel Karuppiah


தமிழர் முன்னேற்றக் கழக தலைவர் திரு இர. அன்பழகன் அவர்களுக்கு வணக்கம்.

தமிழர முன்னேற்றக் கழகம் மற்றும் திருவள்ளுவர் தமிழப் பள்ளி சார்பாக 10/06/2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவும் , அதனை ஒட்டி மலர் வெளியிட இருப்பதும் மகிழ்ச்சி அளிக்கிறது .

தமிழை மேடை பேச்சுகளாலும், திரைப்பட வசனங்களாலும், நூல்களாலும் இந்தியாவில் மட்டுமின்றி உலகில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் பேசுவதற்கும், கற்பதற்கும், தாய் மொழியான நமது செம்மொழியின் தொன்மையை சாதாரண மக்களும் உணர்ந்துகொள்வதற்கு தூண்டுகோலாக இருந்தவர்; அரசியல் வாழ்விலும் , தமிழ்ப்பணியிலும் தன்னிகரற்று திகழ்ந்தவர்; திராவிடசெம்மல் மறைந்த முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

இங்கிலாந்தில் தமிழ் மொழிப்பயிற்சி , தமிழர் பண்பாடு இவற்றை சிறப்பாக நமது வாரிசுகளுக்கு முன்னெடுத்து செல்கின்ற முன்னோடி இயக்கங்களாக தமிழர் முன்னேற்றக் கழகமும் இலண்டன் தமிழ்ச்சங்கமும் விளங்குகிறது.

இந்த இரண்டு இயக்கங்களின் மூலம் நமது முன்னோர்களால் ஆரம்பிக்கப்பட்டு காலத்தின் மாறுபாடுகளுக்கேற்றவாறு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிற திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியும் தமிழ் மொழி மற்றும் பண்பாட்டு பள்ளியும் தாய் மொழி பயிற்சியில் சிறந்து விளங்குகிறது.

இவ்விழாவும் முத்தமிழறிஞர் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் சிறப்பாக நடைபெற இலண்டன் தமிழ்ச்சங்கம், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுப்பள்ளியின் சார்பாக வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க தமிழ்! வளர்க தமிழர் பண்பாடு!

நன்றி!

தலைவர், இலண்டன் தமிழ்ச்சங்கம்.


369 High Street North, Manor Park, London E12 6PG
T: 020 8471 7672, F: 020 8470 1013, E: admin@ltsuk.org
Registered Charity No.: 1097724
Registered in England Company No.: 657373
www.ltsuk.org


The London Tamil Sangam is a company incorporated with limited liability, with authority to omit "Limited" from its name.

தமிழனென்று சொல், தலை நிமிர்ந்து நில்

**LAKSHMI NARAYANA TRUST**
**London Sri Mahalakshmi Temple**
**Charity Reg. No: 292677**
241 High Street North, Manor Park, London E12 6SJ
Tel: 020 8552 5082
Web: www.srimahalakshmitemple.net
e.mail : info@srimahalakshmitemple.net

By Serving the devotees we serve God

**Patrons**
Nadarajah Family - Venus Group

**Board of Trustees**

**President**
Dr Radhakrishnan V

**Vice-President**
Mr. Thayalasamy S

**Chairman**
Mr. A Rengamannar

**Vice-Chairman**
Mr. K Sreenivasan
Mr. Subburam S

**General Secretary**
Mr. K. Sivarupan

**Assistant Secretary**
Mr. Sethuraman S

**Treasurer**
Mr. S. Vijayakumar

**Assistant Treasurer**
Mr. Navaneethakrishnan R

**Public Relations Officers**
Mr. S.Seetharaman

**Cultural Secretary**
Ms. Kumari Selliappan

**Temple Office Manager**
Mr. R. Mohanaprakash

**Communications**
Mr. J.Thiyagarajan
Mr. R. Kannan
Mr. M. Sudarsanan
Mr A. Ananth

[illegible] -2023

**இரா அன்பழகன்**
**தலைவர்**
**தமிழர் முன்னேற்றக் கழகம் - திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி**

தமிழர் முன்னேற்றக் கழகம் உலகத் தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழாவினை வெகுசிறப்பாகக் கொண்டாட இருப்பது கண்டு பேருவகை கொண்டோம்.

விழாவை வெகு சிறப்பாக கொண்டாட இருக்கும் தமிழர் முன்னேற்றக் கழக நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள். மென்மேலும் அவர்களது பணி சிறந்து விளங்கிட வேண்டுமென எமது ஆலயத்தின் ஸ்ரீ மகாலட்சுமி நாராயணரை வேண்டி வணங்குகிறோம்.

ஒரு மொழி இனத்தின் அடையாளம். ஒரு மொழி பண்பாட்டின் அடையாளம். ஒரு மொழி கலாச்சாரத்தின் அடையாளம். உலகில் எத்தனையோ மொழிகள் இருப்பினும் தமிழுக்கு என்று ஒரு தனிச்சிறப்பு உண்டு. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என சொன்னால் மிகையாகாது. தமிழ் மொழியில் உள்ள இலக்கியங்கள் தமிழர் வரலாற்றினை பறைசாற்றிக்கொண்டு இருக்கின்றன. பல மொழிகள் அறிந்த பாரதியார் யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்றார். அது மிகவும் உண்மை. வேற்று மொழியினர் தமிழ் மொழி கற்கும்போது உணர்ந்து இருக்கிறார்கள். தமிழ் என்றால் தொல்காப்பியர், திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர், ஔவையார் நிச்சயம் நினைவுக்கு வர வேண்டும். அந்த வரிசையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தமிழ்ப்பணி, சமுதாயப்பணி மிகவும் போற்றுதலுக்குரியது. அவர்தம் புகழை நூற்றாண்டு விழா எடுத்து கொண்டாட இருப்பது தமிழர் முன்னேற்ற கழகத்தின் தமிழ் மீதான, தமிழுக்கு உழைத்தவர்கள் மீதான பெருமதிப்பை காட்டுகிறது. போற்றப்பட வேண்டியது.

தமிழர் முன்னேற்ற கழகத்தின் மற்றொரு சிறப்பு திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி. ஆழ்வார்கள், நாயன்மார்கள், சமணர்கள் தமிழை வளர்க்க பெரும்பாடு பட்டார்கள். பிற மொழிகளின் ஆதிக்கத்தில் இருந்து தமிழை மீட்டுக்கொண்டு வந்ததில் இவர்களின் பங்கு அளப்பரியது. உலகில் எங்கு சென்று வாழ்ந்தாலும் எப்படி இந்து சமயக் கோவில்கள் இருக்கிறதோ அதைப் போல தமிழ் வளர்க்கும் பள்ளிகள் மிகவும் அவசியம். தமிழ் மொழியின் அவசியம் உணர்ந்து மொழியை இங்கு வரும் மக்கள் மறக்காது கற்றுக்கொள்ள வேண்டும் என முன்னரே திட்டமிட்டு திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியைத் தொடங்கிய தமிழர் முன்னேற்றக் கழக நிர்வாகிகள் மிகவும் போற்றப்பட வேண்டியவர்கள். நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர்கள். அதோடு மட்டுமில்லாமல் ஐந்து மாணவர்களுடன் தொடங்கி தொடர்ந்து தொய்வின்றி பல மாணவர்களை தமிழில் புலமைப் பெற செய்து இருக்கும் ஆசிரியர்கள் ஆர்வத்துடன் தமது பிள்ளைகளை பள்ளியில் சேர்த்த பெற்றோர்கள் அனைவருக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் மொழி மென்மேலும் சிறந்து தமிழர் முன்னேற்ற கழகத்தின் செயல்பாடுகள் மென்மேலும் ஓங்கி உலக மக்கள் அனைவரும் அமைதியுடன் எல்லா வளமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

**இப்படிக்கு**

V. Radhakrishnan

**அறங்காவலர்கள், பட்டாச்சாரியார், சிவாச்சாரியார்கள், ஊழியர்கள் மற்றும் பக்தர்கள்**
**இலண்டன் ஸ்ரீ மகாலட்சுமி ஆலயம்**

LAKSHMI NARAYANA TRUST
London Sri Mahalakshmi Temple
Charity Reg. No.: 292677
241 High Street North, Manor Park, London E12 6SJ, UK
Tel: +44 20 8552 5082 Mob: +44 7827 279 573

ISLAMIC DAWAH CENTRE

இஸ்லாமிய அழைப்புப் பணி மையம் / مركز الدعوة الإسلامية

## மத நல்லிணக்கம் போற்றிய மகத்தான தலைவர் கலைஞர்!

வாழ்க தமிழ்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களுக்கு வணக்கம்

செம்மொழியாம் நம் தமிழ்மொழியையும், தமிழர் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்ற உயரிய நோக்கோடு 1975 ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் தொடங்கப்பட்ட 'தமிழர் முன்னேற்றக் கழகம்' 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற பாரதியாரின் கனவு மெய்யாக வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளியைத் தொடங்கிய பெருமை தமிழர் முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. பொன்விழா ஆண்டை நோக்கி இப்பள்ளி இலண்டன் மாநகரில் சிறப்பாக இயங்கி வருவதில் மகிழ்ச்சியடைகிறோம். இப் பள்ளியைத் திறம்பட நடத்தும் த. மு. க. உறுப்பினர்களுக்கும் பள்ளி ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

திருக்குறள் என்ற உலகப் பொதுமறையை உலகுக்குத் தந்த திருவள்ளுவரை நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குமரிமுனையில் உருவச்சிலை நிறுவி, அழகு பார்த்து மகிழ்ந்தார். ஐந்து முறை தமிழகத்தின் முதல்வராகித் தமிழுக்கும் தமிழ் மக்கள் நலனுக்கும் அயராது உழைத்திட்டார். 'கலைஞரின் பேனா அது தமிழ்த்தாயின் எழுதுகோல்' ஆகும். எத்தனையோ இலக்கிய நூல்கள், கதை வசனங்கள் எழுதிப் புகழ் பெற்றவர் கலைஞர்.

மத நல்லிணக்கம், சமத்துவம் என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டின் சீர்திருத்தங்களைச் செய்து சாதனையாளராகத் திகழ்ந்தவர் நம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். தமிழ் மக்கள் போற்றும் செம்மொழியின் நாயகன் கலைஞர் அவர்களுக்கு இலண்டனில் தமிழர் முன்னேற்றக் கழகம் நூற்றாண்டு விழா எடுத்துச் சிறப்பாகக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்கு உரியது.

தமிழர் முன்னேற்றக் கழகமும் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியும் தன் நலம் கருதாது இலண்டன் மாநகரில் தமிழ்த்தொண்டாற்றுவது கண்டுவியந்து, நன்றி கூறி எங்கள் 'இஸ்லாமிய அமைப்புப் பணி மையம் ' சார்பில் பாராட்டி வாழ்த்துகிறோம். வாழ்க! வாழ்க!!

என்றும் உங்களை வாழ்த்தும்

**IAR ஜபருல்லா**
தலைவர்
**இஸ்லாமிய அழைப்புப் பணி மையம்**

398 High Street North
Manor Park
London E12 6RH
United Kingdom

phone: (+) 44 208 471 5151
fax: (+) 44 208 471 1163
email: contact@idcuk.org
web: www.idcuk.org

Registered Charity in England & Wales
Charity Number: 1085336



# தமிழ் வளர்த்த கவிஞனுக்கு!!
# தமிழர்கள் வழங்கும் அர்ப்பணிப்பு !!




## இந்திய தமிழர் கூட்டமைப்பு
## பிரித்தானிய ஐக்கிய ராஜ்ஜியம்

Itwalondon@gmail.com

| Ravi | Krishna | Raj | Sathish | Rajesh |
| --- | --- | --- | --- | --- |
| +44 7393 287771 | +44 7515 646070 | +44 7961713314 | +44 7534425846 | +44 7917403004 |



# முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டுவிழா

வெல்லட்டும்! - விளங்கட்டும்!
"விடுதலை" எழுத்தாளர் - சொல்லாய்வுச்செம்மல்
குடந்தய் வய்.மு. கும்பலிங்கன் (ஓய்வு) தலைமை ஆசிரியர்
பேசி எண்: 94429 32699

## முன்னுரை

இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத்திற்கும் - இலண்டன் திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளிக்கும், எனக்கும் கடந்த 40 ஆண்டுகட்கும் மேலாகவே நல்லுறவு இருந்து வருகிறது. இலண்டன் அமைப்புகளுக்கு நான் தமிழ்நாட்டுப் பேராளராகச் செயல்பட்டு வருகிறேன். திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளியின் இரண்டாம் ஆண்டு நிறைவு மலர், த.மு.க. வின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழா மலர், திரு.வி.க. நூற்றாண்டுவிழா மலர் முதலியவற்றைக் குடந்தையிலிருந்து அச்சிட்டு அனுப்பியுள்ளேன். திரு.வி.க. மலர் வெளியீட்டு விழாவிற்குத் திராவிடர் கழகத் தலைவர் - "விடுதலை" ஆசிரியர் திரு.கி. வீரமணி அவர்களும், "தென்மொழி" ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும் வருகை தந்து கலந்துகொண்டுச் சிறப்பித்தனர்.

நான் தமிழ்ப் பள்ளிக்குத் தேவையான புத்தகங்கள், குறிப்பேடுகள் முதலியவற்றை அவ்வப்போது அவர்கள் தேவைக்கு ஏற்ப வாங்கி அனுப்புவேன்.

இலண்டன்வாழ் தோழர்களான குடந்தைத் தமிழ்மணி அரங்க முருகையன், தஞ்சாவூர் வெண்டாக்கோட்டை திரு. வீர.முருகு. வீரசிங்கம், பூந்தோட்டம் திரு. சுப. சேகர், உசிலம்பட்டி திரு. பூச்சி. நாகதேவன், புதுக்கோட்டை திரு. அன்பரசு, சிலட்டூர்க் கவிஞர் திரு. வீர இரத்தினம் அவரின் மகன் சிலட்டூர் திரு. இர. அன்பழகன், திரு. வீர. அரசு, இலண்டன் திரு ந. தேவதாசு முதலியோர் இன்றுவரை என் இனிய நண்பர்களே ஆவார்கள். (இவர்களில் சிலர் மறையுற்றுள்ளனர்).

இந்த முன்னுரைப் பீடிகைச் செய்தியுடன் கட்டுரையின் கருப்பொருளுக்கு வருகிறேன்.

இலண்டன் த.மு.க. சார்பில், இலண்டன் மாநகரில் 2022 சூன் 10 ஆம் நாளில் தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டுவிழாக் கொண்டாடுவது குறித்தும், அறிந்தும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் பேராசிரியர் திரு. சுப. வீரபாண்டியனார் கலந்து கொண்டு சிறப்பிப்பது கறந்த பாலில் தேன் கலந்த மகிழ்வுச் சுவையைத் தருகிறது.

டாக்டர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் திரு.மு. கருணாநிதி அவகளின் நூற்றாண்டு நிறைவுவிழா மற்றும் நினைவு விழா பல்வகையாலும் சிறந்து விளங்க எம் மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி மகிழ்கிறேன்.

# தேன்மதுரத் தமிழ்நெஞ்சர் கலைஞர் என்பேன்

இப்புவியில் வாழ்தமிழர் விரும்பிப் போற்றும்
இனியதமிழ்ப் பண்பாளர் கலைஞர் என்பேன்
எப்போதும் தமிழர்தம் உணர்வை எண்ணி
ஏற்றமுறத் தொண்டளிப்போன் கலைஞர் என்பேன்
தப்பாமல் நாள்தோறும் தம்பியர்க்குத்
தமிழின்பம் தந்துவப்போன் கலைஞர் என்பேன்
முப்பாலின் சுவைமேவ உரையளித்து
முத்தமிழுக் கனிசெய்தோன் கலைஞர் என்பேன்

அலைகடலுக் கப்பால்வாழ் தமிழர் நெஞ்சில்
அழியாத இடம்பெற்றோன் கலைஞர் என்பேன்
கலைஞானத் திறமிக்க எழுத்து வேந்தன்
கற்கண்டுச் சொல்லாளன் கலைஞர் என்பேன்
நிலைபுகழை மேன்மேலும் உயர்த்த வேண்டி
நெஞ்சுக்கு நீதிதந்தோன் கலைஞர் என்பேன்
தலைசிறந்த வாழ்வியலை தந்த நற்றாய்த்
தமிழுக்கு பகழீந்தோன் கலைஞர் என்பேன்

பெரியாரின் பெயர்சொல்லும் பிள்ளை என்பேன்
பேறிஞர் அண்ணாவின் தம்பி என்பேன்
நெறியில்லாச் சாதிமதப் பிணக்கொழிக்க
நெஞ்சுயர்த்தி முழக்கமிட்டோன் கலைஞர் என்பேன்
அறியாத துறையுண்டோ? அண்ணன் கண்ட
ஆட்சிதனைக் கண்டுவப்போன் கலைஞர் என்பேன்
சரியான திட்டங்கள் தீட்டி நல்ல
சமத்துவ புரங்கண்டோன் கலைஞர் என்பேன்

வள்ளுவர்க்கு வான்முட்டச் சிலைஎடுத்து
வாய்மணக்க அய்யனென்ற பெயரைச் சூட்டி
தெள்ளுதமிழ் நாட்டோரை மகிழச் செய்தோன்
தேன்மதுரத் தமிழ்நெஞ்சர் கலைஞர் என்பேன்
எள்ளளவும் சோர்வில்லா இன்முகத்தான்
ஏறுபோன்ற நடையுடையோன் கலைஞர் என்பேன்
நல்லமுதல் அமைச்சரென்று நாடு போற்றும்
நற்குணத்துப் பெருந்தலைவன் கலைஞர் என்பேன்

**வீர. இரத்தினம்**
மறைந்த முன்னாள் செயலாளர், தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்



## திருக்குவளைச் சூரியன் புகழ் வாழ்க..!

**'குறள்நெறிச் செம்மல் '**
**பேராசிரியர் முனைவர் கு.வெ.பாலசுப்பிரமணியன்**
**'வள்ளுவம்'**
156.சரபோஜி நகர், மருத்துவக் கல்லூரிச் சாலை,
**தஞ்சாவூர் - 613 004.**
**கைப்பேசி : 94427 14072.**

**ஈ**ரோட்டு நாற்றங்கால் ஏந்தி நின்ற
இளம்பயிரைக் காஞ்சிவயல் பெயர்த்தெ டுத்து
நீரோட்டக் கருத்துகளால் நிலைக்கச் செய்து
நிலைமாறாக் கொள்கையாலே நிற்கச் செய்தான்.
போராட்டம் என்றாலே முன்னால் நிற்கும்
புலிக்குணத்தைப் பெற்றிருக்கும் வீரன், எந்தப்
பாராட்டும் தூற்றுதலும் எண்ணி டாமல்
பகலிரவாய்த் தமிழர்க்கே உழைத்தி ருந்தான்.

**உ**டன்பிறப்பே என்றழைக்கும் குரலில் நெஞ்சை
உருக்குகின்ற மந்திரத்தை வைத்தான்; தொண்டுக்
கடன்பட்டேன் தமிழினத்திற் கென்று சொல்லிக்
இடம்பெயர்ந்து கட்சிமாறிப் பதவித் தேனில்
ஈப்போல மொய்த்திருப்பார் வாழும் நாட்டில்
தடம்மாறாக் கொள்கைக்கே இதயம் வைத்தான்;
தமிழகத்தின் வரலாற்றில் தன்னை வைத்தான்.

**க**டல்நடுவே எறிந்தாலும் உங்க ளுக்குக்
கட்டுமரம் நானாவேன்; கோடை வெய்யில்
நடக்கையிலே செருப்பாவேன்; தேய்ந்த லாடம்
நானென்றார் தெரிந்துள்ளார் என்னு ழைப்பை;
அடித்தாலும் அணைத்தாலும் சிறையி லிட்டே
அடைத்தாலும் விடுத்தாலும் தமிழர் வாழ்வைக்
கெடுப்போரின் வாலறுக்க முன்னிற் பேன்நான்
கேளுங்கள் என்றுரைப்பான் ஆரூர்த் தோழன்!



# கலைஞரைக் கொண்டாடுவோம்!

" தமிழ்ச்செம்மல் "
முனைவர் **கடவூர் மணிமாறன்**,
மேனாள் முதல்வர், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனம், மாயனூர்,
'மணிரெத்தினம் இல்லம்' 1 /53, பெரியார் நகர்,
**குளித்தலை - 639 104.** கரூர் மாவட்டம்.
கைப்பேசி : **94431 44372**

★ **த**மிழகத்தின் முதல்வராகப் பொறுப்பை ஏற்றுத்
**தமிழினத்தின் முகவரி**யாய்த் திகழ்ந்து வந்தார்!
நிமிர்ந்தெழுந்தே சாதிமத வேறு பாட்டை
நெருப்பாக நின்றெதிர்த்தார்; ஏற்றத் தாழ்வே
தமிழ்மக்கள் எவரிடத்தும் தலைதூக் காமல்
தன்மானம் இனமானம் மீட்போம் என்றே
அமிழ்தனைய கருத்துவிதை ஊன்றி வந்தார்!
அகமகிழச் சமத்துவநற் புரங்கள் தந்தார்!

★ **அ**ருந்தமிழர் முன்னேற்றம் அடைதல் வேண்டி
**ஐந்துமுறை முதல்வராக** ஆண்ட வேளை
பெரும்பணிகள் மேற்கொண்டார்; மதங்கள் சாதிப்
பிரிவினையைத் தகர்த்தெறிந்தார்; பிற்பட் டோரின்
உரிமைக்குக் குரல்கொடுத்தார்; வேலை வாய்ப்பில்
உவகையுடன் முன்னுரிமை வழங்க லானார்;
கரவுடையோர் வெம்பழியை வென்றார் இந்நாள்
கடனாற்றத் **தளபதியைக் கொடையாய்**த் தந்தார்!

★ **தீ**ண்டாமைக் கொடுநோயைத் திருடர் கூட்டம்
திணித்திட்ட வேளையிலே திராவி டத்தார்
பூண்டனரே போர்க்கோலம்! **பெரியார் அண்ணா**
புரட்சிவழி நம்தலைவர் **கலைஞர்** நாளும்
ஆண்டதமிழ் வரலாற்றை நினைவு கூர்ந்தார்;
ஆரியத்தின் செருக்கடக்க உறுதி பூண்டார்!
தூண்டாநல் மணிவிளக்காய் வாழ்நாள் எல்லாம்
தொடர்ந்திட்டார் சமன்மைப்போர்! வெற்றி கண்டார்!

★ **இ**ங்கிலாந்தின் தலைநகரம் **இலண்டன்** வாழும்
எ**ந்தமிழர் முன்னேற்றக் கழகம்** கண்டார்!
மங்காத தமிழுணர்வால் இனத்தின் மேன்மை
மாண்புறவே செழிக்கின்ற வகைமை தேர்ந்தார்!
எங்கும்வாழ் தமிழர்தம் நெஞ்சில் வாழும்
ஏந்தல்**நூற் றாண்டுவிழா**க் காணும் போழ்தில்
சங்கத்தமிழ் நறுமலராய் மலரை இந்நாள்
சால்புடனே வெளியிட்டார்! வாழ்த்து வோமே!



## முத்தமிழ் அறிஞர், கலைஞர், மொழிக்காதலர், கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கூறிய பொன்மொழிகள்.

- தேன் கூடும், கஞ்சனின் கருவூலமும் ஒன்றுதான். காரணம், இரண்டுமே அவற்றை நிரப்பிட உழைத்தவர்களுக்கு பயன்படுவதில்லை.
- ஓயாமல் உழைத்த ஒரு தமிழன் இங்கே ஓய்வெடுத்துக் கொள்கிறான் என்று என் கல்லறையில் எழுதப்படும் எழுத்துக்களுக்காக நான் தவமிருக்கிறேன்.
- வீரன் சாவதே இல்லை...கோழை வாழ்வதே இல்லை...
- பெரியார் மலைப்பாறை. அந்த மலைகுடைந்து செதுக்கப்பட்ட மாமல்லபுரத்துச் சிற்பம் அண்ணா. நாமெல்லாம் அந்தச் சிற்பத்தின் மாதிரி வடிவங்கள்.
- சட்டங்களால் மட்டுமே சாதிபேதத்தை ஒழித்துவிட முடியாது. மனமாற்றமே அதை அகற்றும் மாமருந்து.
- நான் நீ என்று சொல்லும் போது உதடுகள் ஒட்டாது. நாம் என்று சொன்னால் தான் உதடுகள் கூட ஒட்டும்.
- வாழும் போது மனிதர்களைப் பிரித்துவைக்கும் சாதிவெறி, அவர்கள் இறந்த பிறகாவது தணிந்துவிடுகிறதா?
- ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்கிறார் என்பதை, அவர் இறந்துபோன நாளிலிருந்து கணக்கிட்டு தெரிந்துகொள்ளலாம்.
- விதவை என்பது வடமொழிச்சொல். கைம்பெண் என்று தமிழில் எழுதினால் ஒன்றுக்கு இரண்டு பொட்டு வைக்கலாம். தமிழ் வஞ்சிக்காது. வாழ வைக்கும்.
- வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்.

**ம. பக்தவத்சலம்**
வங்கி அதிகாரி (ஓய்வு) | திராவிடச் சிந்தனையாளன்

**குமுதா பக்தவத்சலம்**
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி (முன்னாள் ஆசிரியை)



# முத்தமிழறிஞர் உழைப்பினை உலகே வியக்கும் !

**'குறள்நெறிச் செல்வர்' அழகு.நிலவன்**
**( இராம.சந்திரசேகரன்)**
மாநிலப் பொருளாளர்,
**உலகத் திருக்குறள் கூட்டமைப்பு**,
நிறுவுநர் - **சிங்கப்பூர் தங்க மாளிகை**
4385, பழைய மாரியம்மன் கோயில் சாலை,
கீழவாசல், **தஞ்சாவூர் - 613 001.**
கைப்பேசி : **74184 73999, 72009 75916.**

**அ**ன்பும் அறிவும் ஒருங்கே அமையப் பெற்ற பெற்றோரைப் பெற்றவர். எளிமையில் வாழ்ந்தாலும் நேர்மையை மட்டுமே கைக்கொண்டவர். குறைந்த கல்வி அறிவைப் பெற்றிருந்தும் மாமேதைகளின் வரிசையில் முன்னணியில் இடம் பெற்றவர். கடின உழைப்பை மட்டுமே வாழ்நாள் முழுதும் கைக்கொண்டவர். தமிழின் அத்தனை இலக்கியங்களின் மீதும் அளவற்ற ஞானம் கொண்டவர்.

**ஆ**ர்வம், ஈடுபாடு, துடிப்புமிக்க ஆற்றவாளராம் நம் முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்கள் மேற்காணும் நேர்மறைச் சிந்தனைகள் பலவற்றுக்கும் சொந்தக்காரர். எழுதிடத் தாள்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகுமளவிற்கு அப்பட்டியல் நீளும். இயற்கை, இயல்பிலேயே அக்கொடைதனை அவருக்கு வழங்கி அருளிற்று.

**இ**லவச மின்சாரம் தொடங்கி மாணவர்களின் கல்வி உதவித்தொகை வரையிலான அரசுத்திட்டங்கள் ஏராளமானவற்றை வழங்கி வாக்களித்தோர், வாக்களிக்காது இல்லத்தில் இருந்தோர், மாற்றி வாக்களித்தோர் ஆகிய அனைவரும் பயன்பெற உழைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்கள்.

**ஈ**ரடிக் குறளை பாமரரும் எளிமையாய்ப் புரிந்து கொள்ளும் வகையில் குறளோவியம் வழங்கி, வள்ளுவர் கோட்டம், குமரியில் வானளாவியத் திருவுருவம் என வள்ளுவப் பேராசனுக்கு ஐயா எடுத்த வெகுமதிகள் மிக அதிகமானவை.

**உ**தய சூரியனாகவே விளங்கிய அந்த உத்தமரின் நூற்றாண்டு விழாவை இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகம் மிகச் சிறப்புடன் நடத்த முன் வந்திருப்பது போற்றுதலுக்குரியது. அதன் ஒப்பற்ற முயற்சியாக சிறப்பு மலர் ஒன்றை வெளியிட இருப்பதும் பாராட்டத்தக்க அம்சமாகும். எங்கள் பேராசிரியர் சுப.வீ.ஐயா அவர்கள் அச்சிறப்பு மலரை வெளியிட்டு சிறப்புரையாற்ற இருப்பது மேலும் மகிழ்வு தரும் செய்தியாகும்.

**ஊ**ர் போற்றும் – உலகு போற்றும் கலைஞர் ஐயா அவர்கள் புகழ் ஓங்குக. அவர் காட்டிய வழியில் தொடர்ந்துத் தொய்வின்றித் தொண்டாற்றச் சூளுரைப்போம். இலண்டன் வாழும் தொப்புள் கொடி உறவுகளுக்கு என்றும் தோள்கொடுப்போம்.

# தமிழக முதல்வரும், தமிழின் முதல்வரும்.

"இலண்டன் தமிழோசை" ஞானமுருகன்

உலகத் தமிழர்களின் உள்ளங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாகத் "திராவிட மாடல்" என்ற சொற்றொடர் எழுச்சிபெற்று வருகிறது. அன்றைய திராவிட இயக்கச் சிந்தனைகள்தான் இன்றைய திராவிட மாடலுக்கு வித்திட்டது. பெரியாரால், அண்ணாவால், கலைஞரால் வளர்க்கப்பட்ட அந்தச் சிந்தனைகள், கடல் கடந்து பயணித்தபோது, அமரர் வீரசிங்கம், வீரரத்தினம் போன்றோர் அந்தச் சிந்தனைகளை உள்வாங்கி இங்கிலாந்து நாட்டில் பயணிக்க அடித்தளம் இட்டனர். அந்த அடித்தளத்தில் உருவாகி, கொள்கைப் பிடிப்புடன் 50 ஆண்டு காலமாக இயங்கி வரும் "தமிழர் முன்னேற்றக் கழகம்" எனும் இயக்கம் வெளியிடும் இம்மலரிலே முத்தமிழ் அறிஞர் **தமிழக** முதல்வராக இருந்தாலும் , தமிழுக்கு முதல்வராக இருந்து சாதித்தது என்ன? என்ற வரலாற்றுக் குறிப்புகளை இந்தத் தலைமுறையும் , இனி வரும் தலைமுறையும் , அறிந்துகொள்ள வேண்டும் என்ற என் எண்ணத்தில் உதித்த ஒரு சில சான்றுகள் உங்கள் பார்வைக்கு.

1969ல் தமிழக முதல்வராக அரியணை ஏறினார் கலைஞர் கருணாநிதி தமிழ் நாட்டில் மக்கள் பயணிக்கும் இடமெல்லாம் வள்ளுவன் இருக்கவேண்டும் என்ற உணர்வுடன் அனைத்து அரசுப் பேருந்துகளிலும் வள்ளுவன் படத்தையும் , அவன் எழுதிய ஒரு திருக்குறளையும் வைத்தார்.

தமிழ் மொழி, இனம் ,பண்பாடு காக்க தனியாக அமைச்சகம் ஒன்றை 1996 ஆண்டு உருவாக்கினார். தமிழ்வளர்ச்சித்துறைக்கென சென்னையில் தனி அலுவலகக் கட்டிடம் கட்டினார்.

ஆங்கிலம் அறியாதவர்களும் அரசு ஆணைகள் புரிந்துகொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கோடு அனைத்து அரசு ஆணைகளும் தமிழிலும் வரவேண்டும் என்று 1996ல் சட்டம் இயற்றினார்.

தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கணினித் தமிழுக்கு ஊக்கம் தந்து, அதனைப் பயன்படுத்தி நாடு விட்டு நாடு சென்ற தமிழர்களும், அவர்களின் தலைமுறையினரும் தமிழ் மொழி பயின்று தமிழ் பண்பாட்டின் கூறுகளை அறிந்திட அயலகத் தமிழ் இணையவழி பல்கலைக்கழகம் 1999ல் தொடங்கினர்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாட்டின் குமரிக் கடலில் ,வள்ளுவன் எழுதிய 133 வாழ்வியல் அதிகாரங்களை நினைவுகூர்ந்து 133 அடி வள்ளுவன் சிலை அமைத்தார். தமிழகத்தின் தலைநகரில் வள்ளுவர் கோட்டம் கட்டினார்.
அந்நிய மொழிகளின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த பத்தாம் வகுப்பு வரை தமிழ்மொழியினைக் கட்டாயப் பாடமாக்கினார் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் பாடத்தில் மாவட்ட அளவில் முதல் மதிப்பெண் பெறும் மாணவருக்கு மடிக்கணினி பரிசு, 2008-10, 2009-10 கல்வியாண்டுகளில் 2205 மாணவர்கள் பரிசுபெற்றனர். தமிழ் மொழியில் கல்வி பயின்ற மாணவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பில் 20 விழுக்காடு இடஒதுக்கீடு அளித்தார்.

இந்திய சுதந்திர போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதுபோல் தமிழ்மொழிப்போர் வீரர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கினார். அதேபோன்று நாடு போற்றும் நல்ல தமிழ் அறிஞர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு மாதம் ரூ 3000 ஓய்வூதியம் வழங்க 2006ல் ஆணையிட்டார்.

2006-2011 ஆண்டுகளில் மொழிப்போர் தியாகிகள் வாரிசுகளுக்கு மருத்துவக்கல்வியில் இடங்களை வழங்கினார்.
நடுவண் அரசுடன் போராடி சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் ஒன்றினை அமைத்தார்.

அத்தனைக்கும் முத்தாய்ப்பாகக் கோவையில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினை நடத்திக் காட்டினார்.

மொழிவாரி மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட இந்திய ஒன்றியத்தில் தன் தாய்மொழியாக இத்துணைத் திட்டங்கள் தீட்டி செயல்பட்ட முதல்வர் யாரேனும் இருக்கிறார்களா? என்று தேடித்தான் பாருங்கள். தமிழக முதல்வராக அல்ல, தமிழுக்கு முதல்வராக அவர் வாழ்ந்த வரலாறு உங்களுக்குப் புரியும்.

நன்றி


Aristo Travels
PROUDLY PRESENTS
WORLDWIDE
VISA SERVICES
USA VISA
FROM
£109
FROM
£35
INDIA VISA
CANADA VISA
FROM
£99
FROM
£65
SCHENGEN VISA
CHINA VISA
FROM
£55
FROM
£85
DUBAI (UAE) VISA
FOR MORE INFO PLEASE CONTACT
ARISTO TRAVELS
346 HIGH STREET NORTH
EAST HAM LONDON E12 6PH
TEL: 020 8472 1212 - 020 8004 1234
EMAIL : INFO@ARISTOTRAVELS.COM
WWW.ARISTOVISAS.COM



# முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்ப் பண்பாட்டு மையம்
## லண்டன்
# Muthamil Arignar Kalaignar Tamil Cultural Center
## London

Date: 27.05.2023

அன்புடையீர் வணக்கம்

1970 ஆம் ஆண்டு இங்கிலாந்து அரசு சிங்கப்பூர் மலேசியா நாடுகளில் இருந்த தனது முப்படைத் தலங்களை மூடியது. அதன் விளைவாக ஆயிரக்கணக்கான தமிழர்கள் இலண்டனில் குடியேறும் தேவை ஏற்பட்டது. தமக்கான ஒரு அமைப்பையும் அமைத்துக் கொண்டனர் " தமிழர் முன்னேற்றக் கழகம் " 1975-ம் ஆண்டு துவங்கப்பட்ட இவ்வமைப்பு கிட்டதட்ட அரை நூற்றாண்டு காலமாக தமிழர்களின் மொழி கலாச்சாரம் பண்பாடு தொன்மைகளை தூக்கி பிடிக்கும் அமைப்பாக செயல்பட்ட வருகிறது.

இக்கழகம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை இலண்டன் மாநகரில் வெகு விமர்சையாக கொண்டாடுவது ஐரோப்பா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள புலம்பெயர் தமிழர்களுக்கு மிக பெருமையாக உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் தமிழுக்கு ஆற்றிய பெரும் தொண்டாக தமிழகத்தில் செம்மொழி மாநாட்டை உலகமே திரும்பி பார்க்கும் வகையில் சிறப்பாக நடத்தினார். முக்கடல் சங்கமிக்கும் குமரி முனையில் 133 அடியில் திருவள்ளுவர் சிலையை குமரிகடலில் நிறுவி தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேர்த்தார். மேலும் திரைப்படங்களின் வாயிலாக தமிழ் திரைக்கதைகள் வசனம் போன்ற தனது எழுத்துக்கள் மூலம் தமிழ்மொழியை தமிழின் தொன்மையை பாமரனுக்கும் சேரும் வகையில் மெருகேற்றி மக்களிடம் சமூக நீதி, பகுத்தறிவு நிலையை அடைய செய்தார்.

இப்பெருமை மிக்க முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி இணைந்து கொண்டாடும் வேளையில் முத்தமிழறிஞர் தமிழ்ப்பண்பாட்டு மையம் போற்றி புகழ்கிறது. மென்மேலும் தமிழர் முன்னேற்றக் கழகம், திருவள்ளுவர் தமிழ்ப்பள்ளி தொண்டாற்றிட வாழ்த்துகிறது.

செந்தில்குமார்
தலைவர்

mktcclondon@gmail.com

Mastermind abacus

*The Brain Booster..*

20% OFF

# SUPERCHARGE YOUR BRAIN WITH ABACUS TRAINING

Was ~~£320~~

Now £256

- 24 Lessons
- 2 hours per week
- Online and Face to Face Lessons




REGISTER NOW

07388 159 688

www.mastermindabacus.com

பேராசிரியர், **டாக்டர் சு.நரேந்திரன்,**

எம்.எஸ்., பிஎச்.டி., எப்.ஐ.சி.எஸ்., எப்.ஏ.சி.எஸ். (யூஎஸ்)

எப்.ஆர்.சி.எஸ் (கிளாஸ்கோ)

சிறப்பு நிலைப் பேராசிரியர், டாக்டர் எம்.ஜி.ஆர்.மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை

இரைப்பை குடல் உள்நோக்கி அறுவை மருத்துவ நிபுணர், தஞ்சாவூர்

## வாழ்த்துரை

ஆரூரின் நாயகருக்கு, முத்தமிழின் வித்தகருக்கு, நவீன கவிதையின் சித்தருக்கு, மூன்றெழுத்திற்கு உரியவருக்கு, எழுத்துலக மேதைக்கு, பேரறிஞர் அண்ணாவின் தம்பிக்கு, நம்பி வந்தவரை வாழ வைக்கும் தனிப் பெரும் தலைவருக்கு தமிழ்த் தாயின் தவப் புதல்வனுக்கு, கம்பனும், காளிதாசனும் இணைந்த சிந்தனையாளருக்கு,

தேமதுர தமிழோசையை உலகிற்குப் பரப்பிய தமிழ் வேந்தருக்கு அருச்சுனன் வில்லையும் தோற்கடிக்கும், சொல்லம்பு வீரனாகத் திகழ்ந்தவருக்கு, பொதுப்பணிக்குத் தம் வாழ்வை இணைத்தவருக்கு, தமிழுக்குத் தொண்டு செய்தவருக்கு முடிவு என்பது இல்லை என்பதே முடிவு என்பதை உலகிற்கு உணர்த்தியவருக்கு, **"வாழ்க்கை எனும் ஓடம் வழங்குகின்ற பாடம்"** என்ற தத்துவ அறிவுரைப் பாடலைப் படைத்தவருக்கு, முத்துவேலுவின் முழு சொத்தாக மலர்ந்தவருக்கு, தள்ளாத வயதிலும் தமிழைத் தள்ளாது காத்தவருக்கு, மேடைத் தமிழுக்குப் பாதை அமைத்துக் கொடுத்தவருக்கு, திருக்குவளை மலராய் வாழ்ந்தவருக்கு,

தம்பிக்கு என்று பேரறிஞர் அண்ணா அவர்களின் மந்திரச் சொல்லை உடன்பிறப்பே என்று மாற்றிய உதயசூரியன் முத்தமிழறிஞர் கலைஞர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களின் பெருமையை மீண்டும் நிலைநிறுத்தும் வகையில் நூற்றாண்டு விழா கொண்டாடும் இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் உயரிய பணியை வாழ்த்தி மகிழ்வதில் நானும் பெருமை கொள்கிறேன்.

தஞ்சாவூர்
12.05.2023

அன்பன்
Dr.சு.நரேந்திரன்

milma

EST.2006

# இட்லி தோசை மாவு




UK'S NO.1 FINEST DOSA & IDLY WET BATTER MIX

சுவையுடன்
உடனடி சமையல்



CONTACT: Mob: 074 6984 9031, www.milma.co.uk

வணக்கம்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக்
கொண்டாடும் இலண்டன் தமிழர் முன்னேற்றக்கழக உறவுகளுக்கு
அன்பும்! வாழ்த்துகளும்! பாராட்டுகளும்!
கிட்டத்தட்ட எழுபத்தைந்து ஆண்டுகாலம்!
தமிழ்ச்சமூகத்தை, தமிழ்நாட்டை கலை, இலக்கியம், அரசியல் என
கட்டியாண்ட தன்னிகரில்லாத் தலைவன்!
கலைஞர் அவர்கள் கடந்த பாதையை செறிந்தபயணத்தை அவ்வளவு
எளிதாக யாரும் கடந்துவிட முடியாது.
ஆம்! அவர் வகுத்துத்தந்த சமூக மாற்றத்தை சீர்திருத்தத்தை
மறந்துவிடவும் கூடாது!
'தமிழன் என்று சொல்லடா!தலைநிமிர்ந்து நில்லடா!' 'என்ற நாமக்கல்
கவிஞரின் வரிகளை ஒவ்வொரு தமிழனுக்குள்ளும்
உணர்வாக்கியவர்! கல்வியிலும் வேலைவாய்ப்பிலும்
அவர்பெற்றுத்தந்த இட ஒதுக்கீடு செய்த சமூக மாற்றம்
கலைஞருக்கே உரியது என்பது மிகையல்ல!
அனைத்து சாதியாரும் அர்ச்சகர் எனும் சமூக சமத்துவத்திற்கான
தந்தை பெரியாரின் அறைகூவலை அச்சாணியாக நின்று
முன்னெடுத்தவர்!
கடமை! கண்ணியம்! கட்டுப்பாடு! எனும் பேரறிஞர் அண்ணாவின்
வழியினை திசைபிசகாமல் வாழ்ந்துகாட்டியவர்!
தமிழனின் உணர்வும் சுயமரியாதையும் மழுங்கடிக்கப்படாத வாளாக
அவர்தம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் என்றென்றும் வாழ்வார்
கலைஞர்!

வாழ்க அவர்தம் புகழ்!

**சு. கவிபாலா**
மாவட்ட துணைத்தலைவர்
**தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் & கலைஞர்கள் சங்கம்**
**சிலட்டூர், புதுக்கோட்டை மாவட்டம்**

# ஆயிரம் ஆண்டு அழியாத சரித்திரம்....!

கலைஞர் நல்ல தமிழ் சுவைஞர்..!

கலைஞர் தமிழ்த் தாயின் தலைமகன்..!

கலைஞர் வள்ளுவர்கோட்டம் அமைத்திட்ட பெருமகன்..!

கலைஞர் குமரி முனையில் முப்பால் அய்யனுக்கு சிலை எழுப்பிய திருமகன்..!

கலைஞர் பேச்சுலகின் பிதா மகன்..!

கலைஞர் எழுத்துலகின் தலைக் காவிரி..!

கலைஞர் காலம் தந்த தமிழ்க் கொடை....!

கலைஞர் அறிஞர் அண்ணாவின் சொல் அருவி..!

கலைஞர் தந்தைப் பெரியாரின் கொள்கைப் போராளி..!

கலைஞர் தமிழனுக்கு வாய்த்திட்ட ஞானத் தந்தை...!

கலைஞர் கரகரத்த குரலால் உடன்பிறப்பே.. என்று உசுப்பி விடும் போர் முரசு..!

கலைஞர் செம்மல்களுக்கெல்லாம் சிலை உயர்த்திய சிற்பி...!

கலைஞர் தமிழுக்கு செம்மொழித் தகுதி பெற்றுத் தந்த முதல்வன்..!

கலைஞர் திருக்குவளை தந்த தமிழரின் பாதுகாப்பு..!

கலைஞர் திரைப்படங்களில் வசனத் "தீ" மூட்டிய வார்த்தை வள்ளல்..!

கலைஞர் சீமான்களை சிதறடித்து விரல் சூப்பி வெற்றி பெற்ற சாமானியர்களின் சரித்திரத் தலைவர்..!

கலைஞர் கலையுலகின் காலக் கண்ணாடி..!

கலைஞர் பொன்னர் சங்கருக்கு வீர காவியம் தீட்டிய நாவலாசிரியன்..!

கலைஞர் பாயும் புலி பண்டாரக வன்னியனுக்கு பக்கம் பக்கமாக வரலாறு தீட்டிய எழுத்துத் தேனாறு..!

கலைஞர் தொல்காப்பியத்திற்கு உரை தந்த உயிர் காவியம்...!

கலைஞர் அண்ணா அறிவாலயம் தந்த புகழாலயம்..!

கலைஞர் ஆயிரம் ஆண்டு அழியாத தமிழர் சரித்திரம்..!

கலைஞர் இலண்டன் தமிழர் முன்னேற்றக் கழகத்தின் நூற்றாண்டு சிறப்பிதழின் நாயகன்...!

கலைஞர் தமிழர் வாழும் நாடுகளில் தலைப்புச்செய்தி இன்றும்.......!

**மணவை தமிழ்மாணிக்கம்,**
**நிறுவன அறங்காவலர்,**
**பழந்தமிழ்க் காவிரி அறக்கட்டளை**
**மணப்பாறை.**
**9943603331.**



## முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி நூற்றாண்டு விழா சிறக்க வாழ்த்துகிறோம் !

# Best Regards




Providing professional, reliable school transport services to Colchester Royal Grammar and Colchester County High School and private transport.

Address: 55 Kirkland Avenue, Clayhall, Ilford, IG5 0TW
Mobile: 07949182710, 07943878582
Email: ajkcoacheseoutlook.com,
Web:www.ajkcoaches.com

# கலைஞர் பேனா

அனைவர்க்கும் கல்விதர முனைந்திட்ட பேனா
காகிதத்தை ஆயுதமாய் காணவைத்த பேனா
சமூக நீதிக்குச் சபதமிட்ட பேனா
பெண்களெல்லாம் சொத்துரிமை பெறவைத்த பேனா
வேறுபாடுகளின் வேர்முறித்த பேனா
மூடப் பழக்கங்கள் கேடுஎன்ற பேனா

அந்தப் பேனாவில் இருக்கும் மை
பெரியார் தந்த மை அண்ணா தந்த மை
அம்பேத்கர் தந்த மை நீதிக் கட்சி மை
அது மயக்க மையல்ல சுயமரியாதை இயக்க மை

கலைஞரின் பேனா அவர் இதயத்துக்கு அருகிலே
நிறுத்தியது தன் இருப்பை அது
தமிழை உழுத கலப்பை
தெறிக்கும் வசனத்தின் கருப்பை
நாளெல்லாம் பேசலாம் அதன் சிறப்பை

மலரில் தேன் சுரக்கும்
முள்ளில் தேன் சுரக்குமா
முள்ளில் தேன் சுரந்தது
கலைஞரின் பேனா முள்ளில் தமிழ்த்தேன் சுரந்தது

அவரது பேனா முள் நடுநிலை தவறாத தராசு முள்
கடிகார முள் நிகழ்காலம் காட்டும்
கலைஞரின் பேனாமுள் எதிர்காலம் காட்டியது

அந்தப் பேனா முனை நாட்டின் நன்னம்பிக்கை முனை
திராவிட இயக்கத்தின் திருப்பு முனை

**- தஞ்சை தாமு,** 9443508846

பெறுநர்:
இர. அன்பழகன், தலைவர், தமிழர் முன்னேற்றக் கழகம் - இலண்டன்
திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி

YOUR LOCAL SHOP

# GREEN STOP

GROCERY • VEGETABLES • FRESH FRUITS
DAIRY PRODUCTS • FRESH FISHES

515 Barking Road, East Ham, London E6 2LN | Tel: 0208 472 2448 | www.greenstop.co.uk

STOP GO Convenience Store

# STOP-N-GO

CONVENIENCE STORE

GROCERY - OFF LICENCE - NEWS PAPER
PAY ZONE - FRUITS - VEGETABLES

**EAST HAM:** 402 Barking Road, London E6 2SA | Tel: 0208 471 2954
**GANTS HILL:** 572 Cranbrook Road, Ilford, Essex IG2 6RE | Tel: 0208 554 2470
**TILBURY** (TILBURY WINE): 235 Dock Road, Tilbury, Essex RM18 7BJ | Tel: 0137 585 0219

S. SATHA & CO
SOLICITORS
EST. 1997

25 YEARS




079 5628 8671

- SERIOUS AND COMPLEX CRIME
- 24/7 POLICE STATION ASSISTANCE
- MONEY LAUNDERING
- FRAUD, BUSINESS CRIME AND CONFISCATION
- IMMIGRATION, ASYLUM AND NATIONALITY
- RESIDENTIAL AND COMMERCIAL PROPERTY CONVEYANCING
- FAMILY AND CHILDREN
- WILLS & PROBATE

WE PROVIDE EXPERT LEGAL ADVISE TO HELP YOU ACHIEVE YOUR GOALS WE MAKE THE PROCESS EASY AND STRESS FREE FOR YOU

EXPERT **LEGAL ADVISE**

- SPONSORSHIP LICENSE APPLICATION
- SKILL WORKER VISA ENTRY CLEARANCE

Lexcel

www.satha.co.uk
info@satha.co.uk

020 8471 9484
079 5628 8671

358 HIGH STREET NORTH, MANOR PARK, LONDON E12 6PH

## கலைஞரைப் போற்றுவோம்!

- பணசை நடராஜன், சிங்கப்பூர்

தமிழ் என்ற வாளேந்தி
நிலம் வென்ற வீரர்..
மனுநீதிச்சோழன் ஆண்ட
திருவாரூர்க் காரர்..!

நத்தையாக நகர்ந்த
அக்காலத் திரைத்தமிழை
ஏவுகணை வசனத்தால்
தெறிக்கவிட்ட வித்தைக்காரர்..

உணவளிக்கும் விவசாயிகள்
விளைபொருளுக்கு உழவர்சந்தை,
வேளாண் பல்கலைக் கழகம்,
விலையில்லா மின்சாரம்..

பேதமில்லா சமத்துவபுரம்,
பெண்களுக்குச் சொத்துரிமை,
மாணவர்களுக்கு இலவசப் பயணம்,
மாடிக்குடியிருப்பு ஏழைகளுக்கும்..

குடிமக்கள் காப்பியத்தின்
பூம்புகாரில் கலைக்கூடம்,
குறள் தந்த வள்ளுவருக்குக்
குமரிக்கடலில் பெருஞ்சிலை..

அறிவார்ந்த ஆன்றோரின்
நூலெல்லாம் நாட்டுடைமை,
இதுபோன்ற பல செயலால்
இடம்பெற்றார் மக்கள் நெஞ்சில்..

தாக்கும் ஆயுதமும்,
காக்கும் கேடயமும்
தமிழெனக் கொண்ட
கலைஞரைப்
போற்றுவோம்
அவர் நூற்றாண்டில்..

MEDI PRO 24
CARE WITH LOVE



# LET US TAKE CARE OF YOU

## ADULT HOME CARE SERVICES

We are an experienced adult home care, domiciliary services, and health care agency based in East London. We are committed to providing compassionate careers.

## OUR SERVICES

- Domiciliary Care
- Assisted living Care
- Personal Care
- Elderly Care
- Disability Care
- Recovery Care
- End of Life Care
- Specialist Care
- Lifestyle and companionship support, and meal preparation.

Regulated by Care Quality Commission

# WE RECRUITE INTERNATIONAL

## Nurses & Mental Health care Nurses



MEDI PRO 24
CARE WITH LOVE

**FOR MORE DETAILS :**

0203 576 2253
07400349074
www.medipro24.com
info@medipro24.com

Office 1644, 321-323 High Road, Chadwell Heath, Essex, RM6 6AX

## திருக்குவளைச் சூரியன் புகழ் வாழ்க..!

கவிஞர் **சாமி.மல்லிகா**
தஞ்சாவூர்.
கைப்பேசி : 9894 951819

★ **உ**தித்திட்டத் திருக்குவளைச் **சூரி யன்நீ!**
உடன்பிறப்பாய் புவியாண்டச் சூர னும்நீ!
பதித்தாயே தமிழ்ச்சுவடு **பூம்பு காரில்!**
பசுமைகள் விளைத்தாயே சமச்சீர்ப் பேரில்!
மதித்திடுமே நாகூட்டும் எழிலு ரையில்!
**முரசொலி**யாய் அறிவாலயக் கலங்க ரையில்!
துதித்திடுமே சிரமெல்லாம் உன்பேர்ச் சொன்னால்!
தமிழினத்தின் துயர்நீக்க வந்த பின்னால்!

★ **மூத்துவேலர் அஞ்சுகத்தின்** அஞ்சா நெஞ்சன்!
முத்தமிழும் உறவாடும் துஞ்சாத் தேனீ!
தித்திக்கும் தேனூற்று! சந்தக் காரன்!
தமிழ்நாட்டின் மக்களுக்குச் சொந்தக் காரன்!
எத்திக்கும் தமிழ்ப்பரப்பும் கவிதை ஊற்று!
எழுத்தாலும் எடுத்தாளும் தகைமைப் போற்று!
வித்தகனாய் நாவசைத்து எழுது கோலால்,
வசனமதில் மனோகரமாய் மயக்கும் கோமான்!

★ **ப**ட்டங்கள் பெற்றறியா கவிம கன்நீ!
பட்டறிவில் பேரறிஞன்! கலைஞ னும்நீ!
திட்டங்கள் தீட்டிடுவாய் மக்கள் வாழ!
தீர்வளித்தாய் உழவர்க்கும் இன்பம் சூழ!
சட்டங்கள் நலம்காக்க பல்வி தமாய்!
சாயாது பகையாலே நாண யமாய்!
கொட்டங்கள் அடக்கியவன் மதிமா மன்னன்!
**குறளோவி யமுந்**தந்தக் **கருணா நிதி**யன்!

★ **வள்ளுவக்கோட் டம்**செய்தக் கொற்ற வன்நீ!
வல்லினத்தை மெல்லினமாய் உதிர்ப்ப வன்நீ!
அள்ளுமிலக் கியங்களைக் கற்ற வன்நீ
அருந்தமிழுக் கிழுக்கென்றால் எதிர்ப்ப வன்நீ!
பள்ளுகளைப் பாடும்வரம் பெற்ற வன்நீ!
பல்லாண்டு சொல்லாண்டு நிலைத்த வன்நீ!
**தெள்ளுதமிழ்** மறவாத நற்ற வன்நீ!
தெவிட்டாது எம்நெஞ்சில் வாழ்ப வன்நீ!

# சூழ்ச்சியை சூழ்ச்சியால் வென்றவர் கலைஞர்...

கலைஞருக்கு தெரியும்...
விவேகானந்தரை குமரிமுனையில் இருந்து அப்புறப்படுத்த முடியாது என்று.
அதனால் தான்...!
வள்ளுவனை வானுயர நிறுவினார்.
கலைஞருக்கு தெரியும்...
வால்மீகி ராமாயண உபநிடங்களை நிறுத்த சொல்ல முடியாது என்று..
அதனால் தான்...!
திருக்குறளை முன்னிலை படுத்தினார்.
கலைஞருக்கு தெரியும்..
சீதையின் செயலை விமர்சிக்க முடியாது என்று...
அதனால் தான்...!
கண்ணகியின் வீரத்தை முன்னிலை படுத்தினார்.
கலைஞருக்கு தெரியும்...
மகாபாரதத்தை தடுக்க முடியாது என்று..
அதனால் தான்...!
சிலப்பதிகாரத்தை வெகுஜனப்படுத்தினார்...
இது போல, சரியற்ற, தேவையற்ற ஒன்றை அப்புறப்படுத்த, அதை விட சரியான ஒன்றை கொண்டு வந்தார்.
ஏறத்தாழ 70 ஆண்டுகள், ஆரியத்திற்கு இது போன்று ஊமைக்குத்துக்களை தொடர்ந்து கொடுத்துக் கொண்டே இருந்தார்.
அவர்களால், வெளியே சொல்லவும் முடியவில்லை...
உள்ளே மெல்லவும் முடிய வில்லை.
அவர்களுக்கு தெரியும்....!
கலைஞரை ஏன் எதிர்க்க வேண்டும் என்று...
கலைஞருக்கும் தெரியும்..
அவர்கள் ஏன் தன்னை எதிர்க்கிறார்கள் என்று...
புரிந்தவர்கள் கலைஞர் பின் நின்றார்கள்...
ஆனால்...!
புரியாத பலர் கட்டுக்கதைகளில் மூழ்கினார்கள்...
எதிர்மறை அரசியலை நேர் மறையாக செய்தவர் கலைஞர்...
கலைஞர் என்ற பட்டத்திற்கு 100 சதம் பொறுத்தமானவர்...

**- கவிஞர் தமிழ்தாசன் (வழக்கறிஞர்)**
**சென்னை**

தரமான தங்கத்திற்க்கு லண்டனில் சிறந்த இடம்

# LAKSHMIS JEWELLERS



276, High Street North,
East Ham, London E12 6SA

Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448

## திருக்குவளைச் சூரியன் புகழ் வாழ்க..!

**இரா.காசிநாதன்**
255, மூன்றாம் தெரு,
சண்முகநாதன் நகர்,
விளார் சாலை, **தஞ்சாவூர் - 613 006.**
கைப்பேசி : **99422 58481**

கலைஞர் நூறு கவனமாய் கேளு...
அவர் இல்லாத் தமிழகம் தாறுமாறு...


யாருமே எண்ணாததை எழுதியவர்...
யாருமே எழுதியதை எண்ணாதவர்...
புதிது புதுமை புரட்சி இது தான் கலைஞரின் நீட்சி...
பெரியாரின் போராட்ட வலிமையும்
அண்ணாவின் சொல் வன்மையும்
திராவிடத்தின் திண்மையும் நிறைந்தது தான்
கலைஞரின் பேனா மை...

பார்ப்பானியம் மிரளும் பாமரன் திரளும்
பகுத்தறிவும் அருளும் கலைஞரின் பேனா...

கலைஞர் என்பேனா..?
கழகம் என்பேனா..?
கலை என்பேனா..?
காவியம் என்பேனா..?
கவிதை என்பேனா ..?
திராவிடம் தான் என்பேனா..?
இவற்றின் உள்ளடக்கம் தான்
உங்கள் பேனா...

கலைஞரின் பேனா
சமூக நீதியை, சமத்துவத்தை
அறுவை சிகிச்சை செய்த
திராவிட மருத்துவம் ...

வங்கக்கடலே உங்கள்
வசீகரமாய் மாறப்போகிறது
மலை உயர்ந்தது...
கடல் தாழ்ந்தது...
என்னும் இத்தகவல் தகர்ந்து
ஒற்றைப் பேனாவால்
உங்கள் உயரம் சிகரம் தொடுகிறது...


Vasantha Vilas
INDIAN VEGETARIAN RESTAURANT
206 High Street North, E6 2JA | 0208 475 8986
AUTHENTIC
INDIAN VEGETARIAN
RESTAURANT THAT
MAKES YOU FEEL
AT HOME
OPENING HOURS
MON-SUN: 7:00 AM TO 10:00 PM
WWW.VASANTHAVILAS.CO.UK

## தமிழ்த்தாயின் மூத்த குடிமகன் புகழ் ஓங்குக!

'ஔவை அடிப்பொடி'
முனைவர் **மு.கலைவேந்தன்,**
தலைவர், தமிழ் ஐயா கல்விக் கழகம்,
ஔவைக் கோட்டம், திருவையாறு.
கைப்பேசி : 94867 42503

**தி**ருக்குவளையில் பிறந்து செந்தமிழ் நாட்டை மானத்துடனும் அறிவுடனும் வாழ்வதற்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கம்; முத்துவேல் – அஞ்சுகத்தம்மாளின் அருந்தவப் புதல்வராய் பிறந்து, இயல், இசை, நாடகத் தமிழின் மாண்பினை உலகறியச் செய்த தமிழ் அறிஞர்; ஐந்து முறை தமிழ்நாட்டின் முதல்வராய்ப் பொறுப்பேற்று ஆயிரமாயிரம் சாதனைகளால் அனைத்து மக்களுக்கும் சேவையாற்றிய செந்தமிழறிஞர்; தொல்காப்பியப் பூங்கா முதல் சிலப்பதிகாரம் வரை இலக்கியப் படைப்புகளை உரைத்திறத்தால் ஓவியமாக்கிய இலக்கிய இமயம்.

**வா**ன்புகழ் திருவள்ளுவருக்குக் கோட்டம் கண்டு, பொய்யாமொழிப் புலவர் படைப்புக்குக் குறளோவியம் தந்து, குமரி முனையில் தெய்வப்புலவர் வள்ளுவப் பேராசானுக்கு 133 அடிகளில் சிலை எழுப்பிய, வள்ளுவரின் வழித்தோன்றல். சாதி , மதங்கடந்து சமத்துவத்தை நிலை நாட்ட சமத்துவப் புரங்களை அமைத்துத் தந்த சமய நல்லிணக்கச் செல்வர்; நாள்தோறும் உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதி, கடித இலக்கியத்திற்குப் புத்துயிர் ஊட்டிய மறுமலர்ச்சித் தந்தை; சிந்தை, சொல், செயல் ஆகியவற்றின் வாயிலாக தமிழ்க் குமுகாயத்தில் மாற்றம் ஏற்படுத்திய உலகத் தமிழினத் தலைவர்.

**உ**ரையாடல்களில் புதுமைகளைப் புகுத்தி, செந்தமிழில் உரையாடல்களை உருவாக்கி, தமிழர்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் தமிழை ஆளுமைப்படுத்திய அருந்தமிழ்ச் சிற்பி. கலைஞர் என்ற சிறப்பு பெயரால் இன்றளவும் அழைக்கப்படும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் அளப்பரியப் பணிகள் எண்ணிடங்காதவை.

**த**ந்தைப் பெரியாரிடம் தன்மானத்தையும் பேரறிஞர் அண்ணாவிடம் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டினையும் பட்டுக்கோட்டை அழகிரியாரிடம் பேச்சாற்றலையும் தந்தை முத்துவேலரிடம் கவியாற்றலையும் தாய் அஞ்சுகத் தம்மையாரிடம் அன்பின் ஆழத்தையும் கற்றுத் தேர்ந்த கலைஞரின் ஆளுமைப் பண்பும் அறிவுத்திறனும் இந்தியத் திருநாட்டின் சாணக்கியர் என்று போற்றுவதற்குக் காரணமாக அமைந்தது.

**த**மிழால் கலைஞரும் கலைஞரால் தமிழும் தகுதி பெற்று, 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற முழக்கத்தை உலகெங்கும் ஓங்கி ஒலிக்கச் செய்த கலைஞரின் தமிழுணர்வை நாமும் பெறுவோம்; நற்றமிழ் இலக்கிய, இலக்கணங்களை அறிந்து கொள்வோம்; தமிழரின் ஒற்றுமையைக் காப்போம்; தமிழினத்தின் மாண்பினை உலகறியச் செய்வோம்; பகுத்தறிவுச் சிந்தனை பரப்புவதற்கும் தமிழ்ப்பண்பாட்டுப் பெருமைகளைக் காப்பதற்கும் கலைஞரின் நூற்றாண்டு விழாவில் உறுதி ஏற்போம்; தமிழ் கூறும் நல்லுலகில் தமிழனுக்குரிய வரலாற்றுப் பெருமைகளைக் கூறி, 'தமிழின்' என்ற அடையாளத்தோடு தலைநிமிர்ந்து வாழ்வோம்!.




UK BANK HOLIDAYS

New Year's Day (Substitute Day) - January 2 | Easter Monday - April 10 | Spring Bank Holiday - May 29 | Christmas Day - December 25
Good Friday - April 7 | Early May Bank Holiday - May 1 | Summer Bank Holiday - August 28 | Boxing Day - December 26






## தமிழினத்தின் தலைவர் முத்தமிழறிஞரே..!

'முற்போக்குச்சுடர்'
பாவலர் **குளித்தலை முகன்**
**மு.கருப்பண்ணன்**, எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஃபில்.,எம்.எட்.(பி.எச்.டி.)
மல்லிகா இல்லம்,
2/101 சத்தியமங்கலம், **குளித்தலை - 639 120.**
கரூர் மாவட்டம்,
கைப்பேசி : **94426 99170, 63697 58010**

**வெ**ற்றியென்ற சொல்லுக்கு வடிவ மானாய்!
வெண்தாடி வேந்தருக்குச் சொந்த மானாய்!
நற்றமிழின் குறளுக்கு நம்பி யானாய்!
நாடறிந்த **அண்ணாவின் தம்பி** யானாய்!
சுற்றமென்ற தமிழினத்தின் தலைவ னானாய்!
சுயமரியா தைக்குநீயே முதல்வ னானாய்!
உற்றதுணை எங்களுக்கு நீயே ஆனாய்!
"**உடன்பிறப்பே**" என்றாலே நலமாய் ஆனாய்!

**ச**மத்துவத்தை எந்நாளும் தந்து சென்றாய்!
சாதனைகள் எல்லாமும் புதுமை செய்தாய்!
நமதுமொழி செம்மொழியைக் காக்க வந்தாய்!
நான்என்ற தற்பெருமை போக்க வந்தாய்!
உமதுசின்னம் எதுவென்றால் சூரியன் என்றாய்!
உயிருள்ள வரையினிலே சூரியன் என்றாய்!
எமக்குத்தான் தொழிலென்றால் 'தொண்டே' என்றாய்!
எல்லோரும் போற்றுகின் றதோழ ரானாய்!

**ம**ழலைபோல் புன்னகையில் துயர்க ளைந்தாய்!
மடமையை மண்ணோடு மடிய வைத்தாய்!
சுழல்கின்ற கதிரவனாய் பவனி வந்தாய்!
சுப்பனுக்கும் குப்பனுக்கும் மேன்மை தந்தாய்!
நிழலாகும் பகுத்தறிவு மன்ற மானாய் !
நிலமெல்லாம் பொதுவுடமை மகன்நீ ஆனாய்!
கழனியெல்லாம் கண்ணியத்தை நடவு செய்தாய் !
கட்டுப்பா டுகடமைக்கே உயிராய் நின்றாய்!


PAROTTA MASTER
AUTHENTIC INDIAN PACKAGING
PANEER KIZHI PAROTTA
3 PAROTTAS + VEGETABLE SALNA
CONTACT 07717375901 FOR PARTY ORDERS
BASED IN IG6, NEWBURY PARK
LIMITED AVAILABILITY SO PRE-ORDER TO NOT MISS OUT
@PAROTTAMASTERLDN
@PAROTTAMASTER
FOOD HYGIENE RATING
5
ONLY OPEN ON FRIDAY AND SATURDAY 6-8PM
www.parottamaster.com

# இலண்டன், திருவள்ளுவர் கழக ஆண்டு விழா !

'தமிழ்ச்செம்மல்'
பாவலர் தஞ்சை **தர்மராசன்**, B.Lit.,M.A.,B.Ed.,
4/84, இராசராச சோழன் நகர், சீனிவாசபுரம்,
**தஞ்சாவூர் - 613 009.**
**கைப்பேசி : 94437 43602.**

வானுயர்ந்த இலண்டன் மாநகரில் குறள்தந்த ஒப்பற்ற
வள்ளுவர் கழகத்திற்கு 'வண்டமிழ்' வணக்கம்கூறி -யான்
வரைந்திட்டேன் கவிமாலை கலைஞர்க்கு நூற்றாண்டில்
வாழியவே நும்பணி வள்ளுவம்போல் வாழியவே..

ஆரூரை அடுத்துள்ள சிற்றூராம் நல்லதொரு
அழகான திருக்குவளை பொன்விளை நாட்டின்
பேரூராய் மாறியது பைந்தமிழன் பிறந்ததனால்
தேரூராம் திருவாரூர் தென்றமிழை தந்ததாலே..

கருணாநிதி என்றும் கலைஞர் என்றும் ஆனவரே,
ஒருமித்த புகழெய்தி உயர்ந்து சிறந்தவரே, நல்ல
முத்துவேலர் பெற்றெடுத்த முத்தமிழே வாழியவே
கத்தும் கடல்போல காலமெல்லாம் வாழியவே..

ஈரோட்டுப் பள்ளியிலே ஏடெடுத்துக் கற்றவரே,
நீரோட்டம் போல் தமிழை நெஞ்சில் சுமந்தவரே,
கஞ்சிநகர் கல்லூரியில் அண்ணாவிடம் கற்று
காலமெல்லாம் தம்பியாய் வாழ்ந்த கலைஞரே..

அரசியலில் அடிவைத்து அயராமல் தானுழைத்து
முரசொலியாய் தமிழுக்கு முன்னின்று கொடிபிடித்து
கல்லடியும் சொல்லடியும் பெற்றுக் கலங்காமல்
கல்லக்குடிப் பெயரை காலூன்றச் செய்தவரே,

அமைச்சர்பணி ஏற்று ஆட்சி அமைத்து மாறாமல்
இமைப்பொழுதும் ஓய்வின்றி உழைத்த எங்கள்
கலைஞர் பெருமானே, கலைத்துறை நாயகனே
விலை ஏதுமுண்டோ உன்திறமைப் புகழுக்கு

தமிழ்நாட்டு முதல்வராய் தந்தபல திட்டங்கள்
அமுதம் அங்காடி அரசு ஊழியர் ஆசிரியர்நலம்
அல்லலின்றி சுதந்திரமாய் வாழ வழிசெய்தாய்
அமைதிப்பெருங் கடல்நீ அன்னைத்தமிழ் நீ

போற்றிடினும் தூற்றிடினும் புன்முறுவல் செய்து
காற்றாய் மழையாய் கார்மேக மழையானாய்
நோயுற்ற நேரத்திலும் நாட்டை, மக்களை மறவாமல்
ஓய்வறியா சூரியனாய் உழைத்த திருமகன் வாழி

நூற்றாண்டு அகவைத்திருநாளில் நும்புகழ் வாழியவே
மாற்றாந்தாய் போலின்றி மக்கட் பணி செய்தவரே
போற்றிடுவோம் புகழ்மாலை சூட்டிடுவோம்
ஏற்றிடுவோம் கழகக்கொடி பறக்கட்டுமே

# Akilan Enterprises
## Wedding Package

274 High Street North, E12 6SA
Tel : 02085480033, 07957653005






1. Wedding Garlands 4
2. Jasmine Strings 50
3. Rosepetals veni 1
4. Sambangi Veni 1
5. Kumba Maalai 1
6. Betal Leaves 50
7. Banana Leaves 4
8. Mango Leaves 25
9. Loose Flowers 500g







**NEW OFFER ON OUR PACKAGE! £425**

seelans superstore

# SEELANS SUPERSTORE

332-338 High Street North, London E12 6PH • Tel: 020 8471 5733

## Groceries – Fresh Vegetables & Fruits
## Pooja Items – House Hold Items



# பன்முகத் தலைவர் கலைஞர்

தமிழ்தாசன்,
சென்னை

"விழ்வது நாமாக இருந்தாலும், வாழ்வது தமிழாக வேண்டும்." என்பதை வாழ்வின் ஒவ்வொரு நாளும் எண்ணிச் செயலாற்றிட ஒவ்வொருவரும் உறுதி கொள்வோம் என்று, தமிழினத் தலைவராக வாழ்ந்து, வரலாற்றில் பொன்னேடுகளைப் பதிவு செய்து மறைந்த கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை நினைக்கும்பொழுது நெஞ்சம் அவர்தம் தியாக வராற்றை அசைபோடுகின்றது.

என் பாதை சுயமரியாதைப் பாதை, தமிழின நலம் காக்கும் பாதை, பெரியார் பாதை, அண்ணாவின் பாதை, அறவழிப்பாதை, அமைதிப் பாதை, "பல முனைகளில் என்னைப் பயமுறுத்தினாலும், அந்தப் பாதையில் இருந்து மாற மாட்டேன்" என்று அரசியலில் பெரியாரின் அரிச்சுவடிகளையும், அண்ணாவின் அடிச்சுவடுகளையும் கொண்டு பயணம் செய்தவர் கலைஞர்.

என் பொதுவாழ்வுப் பயணத்தில் இடர், துயர், இன்பம், துன்பம், எதிர்ப்பு, ஆதரவு, ஏச்சு, பேச்சு, இழிவு, பழி என எத்தனையோ விதவிதமான நிகழ்வுகளை எதிர்கொள்ளும் போது, என்னை ஆளாக்கிய பெரியாரையும், அரவணைத்து வழிநடத்திய அண்ணாவையும் நினைத்துக்கொண்டு இலட்சியத்தில் இம்மியளவும் சறுக்கல் இல்லாமல், எச்சரிக்கையுடன் நடந்து கொண்டிருக்கிறேன். கழக உடன்பிறப்புகளையும் - அன்பெனும் அமுது ஊட்டி - ஆதரவு கரம் நீட்டி - துணை நிற்கும் கோடிக்கணக்கான தமிழ்ப் பெருமக்களையும் அரசியலுக்கும், கட்சி பிரச்சினைகளுக்கும், அப்பாற்பட்டு வாழ்த்தி வருகின்ற அனைத்து நெஞ்சங்களையும், தூயத் துணைகளாகக் கொண்டு இந்தத் துணைகள் என்றும் இருக்கும் என்று நம்பிக்கையுடன் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளுடன் எஞ்சியுள்ள பயணத்தைத் தொடர்கிறேன். "என் கடன் பணி செய்து கிடப்பதே" இப்படியாக என்றும் உறுதிமொழி எடுத்து அவர் வாழ்ந்து காட்டியவர்.

"அண்ணா வழியில் அயராது உழைப்போம் ஆதிக்கம் அற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்" இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம் "வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம். மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி" இப்படியான கல்வெட்டுப் பதிக்கும் ஐம்பெரும் முழக்கங்களைத் தந்து அரசியலில் அதிசயங்கள் படைத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

கலைஞர் அவர்கள் இணையற்ற மனிதநேயம் படைத்தவர்; ஓய்விலா உழைப்பாளர்; மக்கள் மனதில் நின்ற வரலாற்றுத் தலைவர்; ஒப்பற்ற தொலைநோக்குச் சிந்தனையாளர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையிலும், மேலவையிலும் -50 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்பு வகித்து உலக அளவில் சரித்திரம் படைத்த சாதனையாளர்.

எதிர்க்கட்சி வரிசையில் இருந்து ஆளுங்கட்சிக்கு அரிய -பெரிய அரசியல் அறிவுரைகள் வழங்கி வழி நடத்தியவர்.

இந்தியாவில் பல்வேறு குடியரசுத் தலைவர்களையும், பல பிரதமர்களையும் உருவாக்கி ஒரு நிலையான அரசாங்கம் உருவாக அரசியல் பிதாமகனாக - வழிகாட்டியாக இருந்தவர்.

கலைஞர் எழுத்துலக வேந்தர் என்பதால், இளமை முதல் இறக்கும் வரை பல்வேறு இலக்கியப் படைப்புகளை - அரசியல் படைப்புகளை இந்தத் தமிழ் உலகுக்கு தந்து விட்டு மறைந்தவர். அவர் தீட்டிய சமூகப் புதினங்கள் வெள்ளிக்கிழமை, சுருளி மலை, வான்கோழி, புதையல், ஒரே இரத்தம், ஒரு மரம் பூத்தது, அரும்பு, பெரிய இடத்துப் பெண், சாரப்பள்ளம் சாமுண்டி நடுத்தெரு நாராயணன் என்று பல்வேறு படைப்புகள் விரிகின்றன.

உடன்பிறப்புகளுக்கு முரசொலி ஏட்டில் அவர் எழுதிய ' கலைஞர் எழுதிய சிறுகதைகள் சமுதாயத்தின் அவல நிலைகளை சுட்டிக் காட்டியும் அரும்பெரும் பெருமைகளை எய்திடவும் அவர் எழுதுகோல் பணி செய்து இருக்கிறது கடிதம், எனும் தலைப்பில் 12 -க்கும் மேற்பட்ட தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. கலைஞரின் சிறுகதைகள் இன்றைக்கும் தமிழ்ச் சமுதாயத்தின் கருவூலங்களாக நெஞ்சங்களை வருடிக்கொண்டிருக்கின்றன. - அவை அனைத்தும் பகுத்தறிவு பேசக் கூடியவைகளாக - சமூக அவல நிலையை எடுத்துக் கூறிடும் அடையாளமான சூரிய விளக்காக வெளிச்சம் தந்து கொண்டிருக்கின்றன.

கலைஞரின் கலை உலக வாழ்க்கை 1945 46 இல் தொடங்கியது. இறுதிவரை அவர் இலக்கியத்திற்காக ஒரு பகுதியைத் தன் வாழ்க்கையில் நிகழ்த்திக் கொண்டே இருந்தார். மற்றோர் பகுதியை அரசியலுக்காக - சமுதாயத்திற்காகத் தந்து கொண்டிருந்தார். 1996. ஆம் ஆண்டு கலைஞர் கலைத்துறைப் பங்களிப்பைப் பொன்விழாவாகக் கொண்டாடுகிற வாய்ப்பான நேரத்தில், அவர் நாடகங்களுக்கு எழுதிய உரையாடல் பற்றியும், ஏடுகளில் எழுதிய சிறுகதைகளைப் பற்றியும் பல்வேறு தருணங்களில் திரைப்படங்கள் எழுதிய உரையாடல் பற்றியும் சொல்லிச் சொல்லிப் பெருமைப்பட்டார்.

திருவாரூரில் தொடங்கிய அவரது பொது வாழ்க்கை... அரசியல், சமுதாயம் முன்னேற்றத்திற்கான பணிகள் மேற்கொண்ட போது, குண்டலகேசி இலக்கியத்தை ஒரு வானொலியில் நாடகமாக ஆக்கி அனுப்பி வைத்த போது, அது திருப்பி அவருக்கே அனுப்பப்பட்டது. ஒளிபரப்பப்பட இயலாது என்ற செய்தி அறிந்த பிறகு திரைப்படத்திற்கு அவர் எழுதும் வாய்ப்பு வந்தபோது மந்திரி குமாரி படமாக எடுக்கப்படுப் புகழ் வாய்ந்தது எனப் பாராட்டும் பெற்றது என்பதையும் அவரே சொல்லி நமக்குத் தெரிந்த நற் செய்தியாகும்.

திரைப்படங்கள் 75 க்கு மேல் வசனம் எழுதி இருக்கிறார். பாடல்களும் தீட்டி உள்ளார். இராஜகுமாரி தொடங்கிய அவரது திரைப்படக் கலைப் பயணம், அவர் மண்ணை விட்டு மறையும் வரை தொடர்ந்து கொண்டே இருந்தார். மேலும் சின்னத்திரையில் இராமானுஜர் தொடர் கடைசியாக அவர் எழுதிக் கொண்டிருந்தது அனைவரின் நினைவுக்கும் வருகிற செய்தி ஆகும். நான் ஒவ்வொரு அங்குலமும் நகரும்போதும், இந்தச் சமுதாயம் குன்றின் மேல் இட்ட விளக்காக ஒளி விடுவதற்கான

உழைப்பையே வழங்குவதற்கு உறுதி கொண்டிருக்கிறேன். துளி வியர்வையைச் சிந்திடினும், அது காய்ந்து கிடக்கும் இன எழுச்சியை துளிர்த்திட செய்வதற்காகவே என்பதை நான் நினைவூட்டுகிறேன்.. என் கண்ணீர் செந்நீர், உயிர் மூச்சு, என்புதோல் போர்த்த இந்த உடம்பு அனைத்துமே இந்த இயக்கத்தின் உயர்வுக்கு அர்ப்பணிக்கப்படட்டும்." என்று அவர் ஒரு முறை எழுதிக் காட்டிய அந்தச் செய்தி முற்றிலும் உண்மை என்பதை இன்றும் நினைத்துப் பார்த்தால் அனைவருக்கும் தெரியவரும்.

'எனக்கென்று ஒரு தனி வாழ்க்கை கிடையாது. ஒரு இலட்சியத்தை மையமாகக் கொண்டு சுழலும் இயக்கத்தின் வரலாற்றில் நான் ஒரு பகுதிதான். எனக்குத் தாய், தந்தை, சகோதரிகள், மனைவிகள், பிள்ளைகள் என்றிருந்தாலும், அவர்களில் சிலர் என்னை விட்டுப் பிரிந்தாலும் அல்லது என்னுடன் வாழ்ந்தாலும் நான் குடும்பம் என்று கருதுவதும் என்னையும் ஒரு அங்கமாகப் பிணைத்துக் கொண்டிருப்பதும், இந்த இயக்கம் ஒன்றுதானே தவிர, வேறு ஒன்றும் இல்லை என்று உருக்கமாகச் சொன்ன அந்தக் கலைஞர்... காலம் முழுதும் உழைத்து உழைத்து தமிழகத்தை இமையச் சிகரத்தில் ஏற்றி வைத்த பெருமை அவருக்கு உரியதாகும். தமிழகத்தின் வரலாற்றில் இருந்து அப்பெருமகனாரை அகற்ற முடியாது பிரிக்கவும் முடியாது. அவருடைய நூற்றாண்டு விழா இப்பொழுது கொண்டாடப்படுகிறது. அவருடைய சாதனைகள் பற்றிப் பேசப் புகழ் ஓங்குக.

மன்னார்குடி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அண்ணா அவர்கள் மற்றொரு பொதுக்கூட்டத்துக்குச் செல்ல வேண்டியவராக இருந்தார். அப்போது மேடையில் இருந்த கலைஞரைப் பார்த்து, மக்களுக்கு அறிமுகப்படுத்தி, நான் வரலாற்றின் முற்பகுதி எழுதினேன். என் தம்பி கருணாநிதி பிற்பகுதியை எழுதுவார் என்று அடையாளம் காட்டினார்.


இந்தி மொழியை எதிர்த்துத் தமிழ் மொழிக்காகப் போராடிய கலைஞரைப் பக்தவச்சலம் காங்கிரஸ் ஆட்சியில் பாளையங்கோட்டை சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். அண்ணா அவர்கள் சிறைக்குச் சென்று கலைஞரைப் பார்த்துவிட்டு அன்று நெல்லையில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசினார். "இந்துக்களுக்கு எப்படி காசி புனித பூமியோ, இஸ்லாமியர்களுக்கு எப்படி மெக்கா புனித பூமியோ, கிறிஸ்துவர்களுக்கு எப்படி ஜெருசலம் புனித பூமியோ, அதுபோல என் தம்பி கருணாநிதி அடைபட்டுக் கிடக்கும் பாளையங்கோட்டை சிறை தான் எனக்குப் புனித யாத்திரைத் தலம் என்று அவர் உருக்கத்தோடு பாராட்டிக் கலைஞரை நினைவு கூர்ந்தார்.

'தண்டவாளத்தில் தலையை வை என்று சொன்னாலும், மந்திரி பதவி ஏற்றுக்கொள் என்று சொன்னாலும், இரண்டையும் ஒன்றாக கருதுபவன் என் தம்பி கருணாநிதி' என்று அண்ணாவால் பாராட்டப்பட்ட கலைஞருக்கு இன்று பிறந்தநாள் நூறாண்டு விழா எடுக்கப்படுகிறது, வையம் வாழ்த்தட்டும்.

வாழ்க கலைஞர், நிலைக்கட்டும் அவரது சாதனைகள், ஓங்கட்டும் அவருடைய புகழ்!

















## புகைப்படத் தொகுப்பு
















# கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் அரசியல் அடிச்சுவடுகள்

**03.06.1924** இல் நாகை மாவட்டம் திருக்குவளையில் வாழ்ந்த முத்துவேலருக்கும் – அஞ்சுகம் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

**1938** திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் பயின்றபொழுது 'வாருங்கள் எல்லோரும் இந்திப் போருக்கு' என அழைத்துத் தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டவர்.

**1941** இல் மாணவர் மன்றம் என்கிற அமைப்பைத் தொடங்கித் தலைவராகச் செயல்பட்டவர்.

**1942** இல் கலைஞர் - அறிஞர் அண்ணா அவர்களுடனான முதல் சந்திப்பு நடைபெற்றது.

**28.05.1944** பேபி டாக்கீசில் முதல் நாடகமான 'சாந்தா (அல்லது) பழனியப்பன் ' நாடகத்தை அரங்கேற்றினார்.

**1945** இல் பெரியாரின் 'குடியரசு' வார இதழின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.

**1946** இல் முதல் திரைப்படமான 'இராஜகுமாரி' க்குக் கதை வசனம் எழுதினார்.

**10.08.1948** இல் 'முரசொலி' நாளிதழ் மாத இதழாகத் தொடங்கப்பட்டது.

**17.09.1949** இல் சென்னை ராபின்சன் பூங்காவில் திராவிட முன்னேற்றக் கழகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கினார். அண்ணாவின் படைத்தளபதியாக விளங்கிய கலைஞர் அவர்கள் கழகத்தின் பொதுக்குழு மற்றும் பிரச்சாரக் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**1951** இல் 'மாலைமணி' இதழின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

**1951** இல் டிசம்பர் 13, 14, 15, 16 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெற்ற தி.மு.கழக முதல் மாநில மாநாட்டின் இரண்டாம் நாள் அனைவரும் வியக்கும் வகையில் சொற்பொழிவாற்றினார்.

**04.01.1953** நெசவாளர்களின் துயர்துடைக்க – தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை, தோளில் சுமந்து சென்னையில் வீதி வீதியாகச் சென்று விற்றார்.

**15.07.1953** இல் டால்மியாபுரம் என்பதைத் தமிழில் கல்லக்குடி எனப் பெயர் மாற்றம் செய்யக்கோரி போராட்டம் நடத்தியதால் கைது செய்யப்பட்டு 6 மாத சிறைவாசத்திற்கு உள்ளாக்கப்பட்டார்.

**1957** இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருச்சி மாவட்டம் குளித்தலைத் தொகுதியில் போட்டியிட்டு முதல் முறையாகச் சட்டமன்றத்தில் நுழைந்தார்.

**04.05.1957** சட்டமன்ற உறுப்பினராக தன்னுடைய முதல் உரையில் நங்கவரம் விவசாயிகளின் போராட்டம் பற்றி எடுத்துரைத்தார்.

**25.09.1960** இல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளராகத் தலைமைக் கழகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1962** சட்டமன்றத் தேர்தலில் தஞ்சைத் தொகுதியில் வெற்றி பெற்று, சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**1963** இல் இந்தி எதிர்ப்புப் போராட்டக்குழுத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

**1964** சென்னை மாநகராட்சித் தேர்தல் பணிக்குழுத் தலைவராகப் பொறுப்பேற்று வெற்றிகண்ட கலைஞருக்கு அண்ணா அவர்கள் கணையாழி பரிசளித்தார்.

**15.06.1964** தி.மு. கழகப் பொருளாளராகக் கலைஞர் அவர்கள் இருந்தபொழுது சென்னை தேனாம்பேட்டையில் உள்ள 'அன்பகம்' கழகத்திற்காக வாங்கப்பட்டது.

**16.02.1965** மொழிப்போரின் பொழுது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுத் தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

**18.09.1966** கட்சிப்பணி, மொழிப்போர், சிறைவாசம் போன்ற பல இன்னல்கள் இருந்தபோதும் தன்னுடைய 'காகிதப்பூ' எனும் நாடகத்தை அரங்கேற்றினார்.

**1967** டிசம்பர் 29, 30, 31 மற்றும் ஜனவரி 1 ஆகிய நாட்களில் சென்னையில் நடைபெற்ற தி.மு.க. 4வது மாநில மாநாட்டில் – அண்ணாவிடம் ரூ.11 இலட்சத்தைத் தேர்தல் நிதியாக வழங்கினார்.

**06.03.1967** சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று முதன்முறையாக அமைக்கப்பெற்ற தி.மு. கழக ஆட்சியில் அண்ணாவின் அமைச்சரவையில் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பதவியேற்றார்.

**03.02.1969** பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்தார். அண்ணாவின் மறைவையொட்டிக் கலைஞர் அவர்கள் இதயத்தை இரவலாகத் தாருங்கள் அண்ணா என்று கசிந்துருகிக் கவிதை எழுதியிருந்தார்.

**09.02.1969** அண்ணாவின் மறைவைத் தொடர்ந்து சட்டமன்றக் கட்சித் தலைவராகக் கலைஞர் அவர்கள் தேர்வு செய்யப்பட்டு **10.02.1969** அன்று முதலமைச்சராகப் பதவியேற்றார்.

**27.07.1969** தி.மு கழகத்தின் 4வது பொதுக்குழுவில் கலைஞர் அவர்கள் முதன்முறையாகக் கழகத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

**15.03.1971** சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வென்று, தமிழக முதல்வராக இரண்டாம் முறையாகப் பொறுப்பேற்றார்.

**24.12.1973** தந்தை பெரியார் அவர்கள் மறைந்த பொழுது, பெரியாரின் உடலை அரசு மரியாதையுடன் அடக்கம் செய்ய ஆணை பிறப்பித்தார்.

**1974** சுதந்திர தினமான ஆகஸ்டு 15 அன்று கோட்டைக் கொத்தளத்தில் மாநில முதல் அமைச்சர்கள் தேசியக் கொடி ஏற்றும் உரிமையை மத்திய அரசிடம் போராடிப் பெற்றுத் தந்தார்.

**1977** சட்டமன்றத் தேர்தலில் அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்று, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரானார்.

**1979** தமிழை மத்திய ஆட்சி மொழியில் இணைக்கக் கோரி கறுப்புக் கொடி ஊர்வலமும், கழகத் தோழர்கள் இல்லங்களில் கறுப்புக் கொடி ஏற்றிடவும் செய்தார்.

**15.09.1981** ஈழத் தமிழர் நலனுக்காகப் போராடியதற்காக மாநில அரசு கலைஞர் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

**1983** இலங்கையில் நடைபெற்ற ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்துத் தமது சட்டமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்தார்.

**1986** இந்தி மொழி திணிப்பை எதிர்த்துப் போராடி அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை எரித்ததால் கைது செய்யப்பட்டுச் சிறைத்தண்டனை பெற்றார்.

**15.09.1987** திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகமாக விளங்கிவரும் அண்ணா அறிவாலயத்தைத் திறந்து வைத்துக் கழகத்திற்கு அளித்தார்.

**27.01.1989** தமிழக சட்டமன்றத் தேர்தலில் துறைமுகம் தொகுதியில் வெற்றி பெற்று 3-வது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

**28.03.1989** கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது மிகப் பிற்படுத்தப்பட்ட சமுகத்திற்கு 20 சதவீத இடஒதுக்கீடு வழங்கினார்.

**06.05.1989** பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை தரும் சட்டத்தை நிறைவேற்றிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றார்.

**25.05.1990** தென்பாண்டிச் சிங்கம் நூலுக்காகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் 'மாமன்னன் இராஜராஜன் விருது' குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா அவர்களால் வழங்கப்பட்டது. மேலும் அவர் தங்கப் பேனா ஒன்றைப் பரிசாக அளித்து, முத்தமிழறிஞர் எனப் பட்டம் வழங்கினார்.

**22.06.1990** மலைவாழ் மக்களுக்குக் கலைஞர் அவர்கள் வழங்கிய 1 சதவீத இடஒதுக்கீட்டினால் தமிழகத்தில் மொத்த இடஒதுக்கீடு 69 சதவீதமாயிற்று.

**07.08.1990** கலைஞர் அவர்கள் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தின்படி மண்டல் கமிஷன் அறிக்கை ஏற்கப்பட்டு, மத்திய அரசுப் பணிகளில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

**30.01.1991** சந்திரசேகர் தலைமையிலான மத்திய அரசு தவறான குற்றச்சாட்டைச் சுமத்தி, கலைஞர் அரசைக் கலைத்தது.

**1996** தமிழக சட்டமன்றத் தேர்தலில் வென்று தி. மு. கழகம் ஆட்சி அமைத்தது. துறைமுகம் தொகுதியில் வெற்றி பெற்ற கலைஞர் அவர்கள் 4-வது முறை தமிழக முதலமைச்சர் ஆனார்.

**1996** இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், கலைஞர் அவர்களின் உதவியுடன் மத்தியில் தி.மு.க. உள்ளிட்ட 13 கட்சிகள் உள்ளடக்கிய ஐக்கிய முன்னணி ஆட்சி அமைந்தது.

**27.07.1997** கழக அமைப்புகளுக்கு 10-வது தேர்தல். கலைஞர் ஏழாவது முறையாகத் தலைவர் ஆனார்.

**1997** இந்தியாவில் முதல் "தகவல் தொழில்நுட்பக் கொள்கை" வழங்கினார்.

**1997** "சமத்துவபுரம்" உருவாக்கினார், ஊரக வளர்ச்சியை ஊக்குவிக்க "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்", நமக்கு நாமே திட்டம் தொடங்கப்பட்டன.

**07.02.1999 – 08.02.1999** தமிழ் மொழியின் எதிர்காலம் இனி இணையத்தில் உள்ளது என்ற தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ் இணைய மாநாடு நடத்தியவர்.

**01.01.2000** தமிழகத்தின் குமரி முனையில் திருக்குறள் கொடுத்த 'அய்யன் திருவள்ளுவர் சிலை' நிறுவினார்.

**08.04.2000** இல் – கலைஞர் 8-வது முறை கழகத் தலைவராகத் தேர்வு.

**04.07.2000** தரமணியில் "டைடல் பார்க்" திறந்தார் கலைஞர்.

**30.07.2001** செல்வி ஜெயலலிதா ஆட்சியில் நள்ளிரவில் மனிதாபிமானமற்ற முறையில் தலைவர் கலைஞர் கைது!

**13.12.2001** கடற்கரை காமராசர் சாலையில் காழ்ப்புணர்ச்சி காரணமாகக் கண்ணகி சிலை அகற்றம்; கலைஞர், 'கண்ணகி சிலையை அதே இடத்தில் வைக்கும்வரை தமிழர்களின் போராட்டம் ஓயாது' என்றார்.

**02.04.2003** 9-வது முறை தலைவராக கலைஞர் தேர்வு.

**30.09.2003** அண்ணா அறிவாலயத்தில், 'கலைஞர் கருவூலம்' காட்சி அரங்கினை உருவாக்கி, அதனை முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்களைக் கொண்டு திறக்கச் செய்தார்.

**04.05.2004** பாராளுமன்றத் தேர்தலில் கலைஞர் தலைமையிலான கூட்டணி தமிழகத்தில் 40-க்கு 40 என மகத்தான வெற்றி பெற்றது.

**22.05.2004** கலைஞரின் ஆதரவுடன் மத்தியில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு – டாக்டர் மன்மோகன் சிங் அமைச்சரவை பதவியேற்பு.

**02.07.2005** தமிழ் மக்களின் பெரும் கனவாக இருந்து வந்த "சேது சமுத்திரத் திட்டம்" தொடக்கம்.

**13.05.2006** சட்டமன்றத் தேர்தல் கழகம் மாபெரும் வெற்றி – கலைஞர் தனது சொந்த மண்ணான திருவாரூரில் வென்று 5-வது முறையாக முதலமைச்சர் ஆனார்.

தேர்தல் வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றும் வகையில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம், 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகள் கூட்டுறவுக் கடன் ரத்து, கிலோ அரிசி 2 ரூபாய் திட்டம், என மூன்று திட்டங்களுக்கும் பதவியேற்பு விழா மேடையிலேயே கையொப்பமிடல்.

**16.05.2006** "அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்!" என்பதை முதல் அமைச்சரவைக் கூட்டத்திலேயே தீர்மானமாக நிறைவேற்றினார்.

**03.06.2006** ஜெயலலிதா அகற்றிய கண்ணகி சிலையைக் கலைஞர் மீண்டும் அதே இடத்தில் நிறுவினார்.

**15.07.2006** கலைஞர் அவர்கள் "காமராசர் பிறந்தநாள்! கல்வி வளர்ச்சி நாள்!" என அறிவித்தார், அத்துடன் ஏழை எளிய பிள்ளைகள் ஊட்டச்சத்துடன் கல்வி கற்க "சத்துணவுடன் வாரம் இரண்டு முறை முட்டை" திட்டம் தொடங்கினார்!

**21.07.2006** நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்குச் சிலை திறப்பு.

**17.09.2006** நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவச நிலம் வழங்கும் திட்டம்!

**01.11.2006** இந்திய உபகண்டத்தில் தமிழினத்திற்கான தனி நிலமாக "தமிழ்நாடு மாநிலம்" அமைந்த 50 ஆம் ஆண்டு பொன்விழா! சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது.

**05.12.2006** கலைஞரின் கோரிக்கையை ஏற்று, சென்னையில் செம்மொழித் தமிழ் ஆய்வு மையம் அமைக்க ஒப்புதல் தெரிவித்து மத்திய அமைச்சர் அர்ஜுன்சிங் கடிதம்.

**10.01.2007** கலைஞர் புத்தகக் கண்காட்சி அமைப்பு நிறுவனத்திற்கு, சிறந்த படைப்பாளிகளை ஊக்குவிக்க சொந்த நிதியில் ரூபாய் ஒரு கோடி நன்கொடை வழங்கினார்!.

**05.02.2007** தமிழ் நாட்டின் உயிர்நாடி பிரச்சனையான காவிரி நதிநீர் பங்கீடு குறித்து, "காவிரி நடுவர் மன்றம் இறுதித் தீர்ப்பு" கிடைத்தது.

**11.05.2007 - 12.05.2007** அரை நூற்றாண்டுக்காலம் தமிழ் மக்களின் பிரதிநிதியாக அயராது உழைத்த சாதனையாளருக்குச் "சட்டமன்றப் பணியில் கலைஞர் பொன்விழா!"

**18.08.2007** சென்னையில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தொடக்கவிழா.

**13.09.2007** முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் தனி இட ஒதுக்கீடு அவசரச் சட்டம் இயற்றினார்

**07.11.2007** சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி அளித்தது, கலைஞரின் அறிவுரைப்படி 10.6.2009 அன்று துணை முதல்வர் மு.க. ஸ்டாலின் அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

**29.01.2008** தை முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு நாள் எனச் சட்டம் நிறைவேற்றம்.

**26.02.2008** ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார் கலைஞர்.

**24.06.2008** நீர் வளத்தை மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளும் சமமாகப் பெறும் வகையில் மாநிலத்திற்குள் பாயும் நதிகளை இணைக்கும் திட்டத்திற்குக் கலைஞர் அடிக்கல் நாட்டினார்.

**30.6.2008** செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை நிறுவ, சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் அளித்தார்.

**31.07.2008** திருமணமாகாத 50 வயது கடந்த பெண்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் தொடக்கம்.

**15.09.2008** அண்ணா நூற்றாண்டு விழாவில் 1 கிலோ அரிசி 1 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

**20.09.2008** அண்ணா நூற்றாண்டு விழாவில் "பெரியார் விருது" வழங்கப்பட்டது.

**27.12.2008** கழகத்தின் 13-வது பொதுக்குழு – பத்தாவது முறையாகக் கலைஞர் கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**11.02.2009** தலைவர் கலைஞருக்கு முதுகுத் தண்டு அறுவை சிகிச்சை நடைபெற்றது.

**26.02.2009** அருந்ததியர் இன மக்களுக்குக் கல்வியில், வேலை வாய்ப்பில் 3 சதவீத உள் இட ஒதுக்கீடு சட்டம் நிறைவேற்றினார்.

**27.04.2009** இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக, அண்ணா நினைவிடத்தில் கலைஞர் உண்ணாவிரதம்.

**23.07.2009** அனைத்து மக்களும் பயன்பெற மருத்துவ உயர் சிகிச்சைக்குக் "கலைஞர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்" தொடக்கம்.

**09.08.2009** மாநிலங்களுக்கு இடையேயான நட்புறவை மேம்படுத்தும் வகையில் பெங்களூருவில் உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவர் சிலை திறப்பு விழா.

**13.08.2009** தமிழக மற்றும் கர்நாடக மக்களிடையே நட்புறவை, உயர்த்தும் வகையில் சென்னையில் கன்னட மகாகவி சர்வக்ஞர் சிலை திறப்பு விழா நடத்தினார் கலைஞர்.

**26.09.2009** காஞ்சி – அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா. கலைஞர் அவர்களுக்கு அண்ணா விருது வழங்கப்பட்டது.

**2010 – 2011** "சமச்சீர் கல்வி" அறிமுகம் செய்தார்.

**13.03.2010** நவீன சமூகத்தின் சிற்பியான தலைவர் கலைஞரால் உருவாக்கப்பட்ட புதிய தலைமைச் செயலகம் திருமதி சோனியா காந்தி அவர்களின் முன்னிலையில், பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களால் திறக்கப்பட்டது.

**18.03.2010** புதிய தலைமைச் செயலகத்தில் முதல் சட்டப் பேரவைக் கூட்டம்.

**15.05.2010** கலைஞரின் அழகுத் தமிழில் "செம்மொழியான தமிழ் மொழியே" பாடல் வெளியீடு.

**23.6.2010 – 27.6.2010** உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு, கோவையில் நடத்தித் தாய் மொழிக்குப் பெருமை சேர்த்தார்.

**15.9.2010** "அண்ணா நூற்றாண்டு நூலகம்" திறப்பு விழா.

**22.09.2010 – 26.09.2010** மாமன்னன் இராசராச சோழன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் ஆயிரமாண்டு விழா நடத்தினார்

**24.11.2010** நம் தமிழ் மொழிக் கலைஞரின் இடைவிடாத போராட்டங்களால் இந்திய அரசினால் செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டதை நினைவுகூரும் வகையில் சென்னை அண்ணா மேம்பாலம் அருகே கதீட்ரல் சாலையில் செம்மொழிப் பூங்கா அமைத்தார் கலைஞர்.

**22.01.2011** அடையாறு பகுதியில் தொல்காப்பியப் பூங்கா அமைக்கப்பட்டது.

**13.05.2011** திருவாரூர் தொகுதியில் கலைஞர் வெற்றி.

**27.02.2012** திராவிட இயக்கத்தின் நூற்றாண்டு விழா நடத்தினார்.

**08.08.2013** தனது 90 வயதிலும் டெசோ அமைப்பின் சார்பில் தமிழர் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்.

**14.12.2013** உலக நடப்புகள் முதல் உள்ளூர் அரசியல் வரையான அரிய செய்திகளைக் கொண்ட அறிவுக் களஞ்சியம் நெஞ்சுக்கு நீதி 6-ஆம் பாகம் வெளியீட்டு விழா.

**19.05.2016** திருவாரூர் தொகுதியில் 68 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று, கலைஞர் 13வது முறையாக சாதனை வெற்றி!

**10.08.2016** "என் முதல் பிள்ளை முரசொலிக்கு இது பவள விழா ஆண்டு" எனப் பெருமிதம் பொங்க கடிதம் வரைந்தார்.

**02.10.2016** தமிழகத்தின் நதி நீர் உரிமையை என்றும் விட்டுக்கொடுக்காத தலைவர் காவிரிப் பிரச்சினை குறித்து கடிதம்.

**01.12.2016** உடல் நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதி.

**23.12.2016** உடல் நலம் தேறி இல்லம் திரும்புதல்.

**05.06.2017** காங்கிரஸ் தலைவர் இராகுல்காந்தி கோபாலபுரம் இல்லம் வந்து கலைஞரைக் கண்டு உடல் நலம் வினவினார்.

**19.10.2017** முரசொலி வளாகத்தில் முரசொலி பவள விழாக் காட்சி அரங்கை நேரில் உணர்வுகள் பொங்க கண்டு களித்தார்.

**06.11.2017** பிரதமர் நரேந்திரமோடி, கோபாலபுரம் இல்லம் வந்து கலைஞரைச் சந்தித்து, உடல்நலம் வினவினார்.

**29.07.2018** கலைஞரின் உடல் நலன் பின்னடைவு – மருத்துவமனை அறிக்கை.

**07.08.2018** மாலை 6.10 மணிக்குக் கலைஞரின் உயிர் பிரிந்தது

**தொகுப்பு: முனைவர் மு. இளங்கோவன், புதுச்சேரி**

நன்றி: https://kalaignar.dmk.in/

# த.மு.க செயலவை பொறுப்பாளர்கள்

**திரு. ம. தேவதாசு**
பாதுகாப்பு மன்றத் தலைவர்

**திரு. இர. அன்பழகன்**
தலைவர்

**செல்வி. சரசுவதி இராமையா**
பொதுச்செயலாளர்

**திரு. அ. அன்பரசு**
பொருளாளர்

**திருவாட்டி. அல்லி குமார்**
துணைத் தலைவர்

**திரு. ப. கோவந்தராசன்**
துணைச் செயலாளர்

**திரு. அரசு நாகதேவன்**
துணைப் பொருளாளர்

# த.மு.க செயலவை உறுப்பினர்கள்

**திருவாட்டி. இராசம்மா இராமசாமி**
**திருவாட்டி. கலைசெல்வி சுந்தரம்**
**திருவாட்டி. தவமணி மனோகரன்**
**திருவாட்டி. செல்வி நாகதேவன்**
**திருவாட்டி. சரோஜினி சந்திரகோபால்**
**திருவாட்டி. கமலா பாலசுப்பிரமணியம்**
**திரு. ஐ. செல்வராஜ்**
**திரு. இர. செழியன்**
**திரு. இர. அறிவழகன்**
**திரு. இர. அறிவானந்தன்**
**திரு. ராஜ் பூபதி**
**திரு. சுரேஷ் தியாகராஜன்**
**திரு. அ. வெண்ணரசு**
**திரு. செல்வன் நாகதேவன்**

## திருவள்ளுவர் தமிழ்ப் பள்ளி

PLASHET GIRLS SCHOOL (SOUTH), PLASHET GROVE
EAST HAM, LONDON, E6 1DG



ஒவ்வொரு
சனிக்கிழமை காலை
10 மணி முதல் 1 மணி
வரை.

- 5 வயது முதல் பள்ளியில் சேர்க்க அனுமதி.
- பாலர் வகுப்பு தொடங்கி க.பொ.த சாதாரணம் (O-LEVEL), க.பொ.த உயர்தரம் (A-LEVEL) வரை.
- தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு 45 ஆண்டுகளாக தமிழ் கற்பித்தல்

**கேம்பிரிட்ஜ் நடத்தும் தமிழ்த் தேர்வில் ஒவ்வொரு ஆண்டும் 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் தேர்ச்சி பெறுகின்றனர்**

**2023 – 2024 ஆம் ஆண்டுக்கான பள்ளி சேர்க்கைக்கு தொடர்பு கொள்ளவும்!**

**07459528739, 07931463952, 07738529167, 07340077673, 07725049347**

tmktamilschool@gmail.com | www.tmklondon.com
TMK HOUSE – 46A East Avenue, Manor Park, London, E12 6SQ

# அன்புடையீர்!
# வணக்கம்.

தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர்க்குப் பிறகு திராவிட இயக்கத்தினைத் தலைமையேற்று வழிநடத்தியவரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வருமான முத்தமிழறிஞர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா இலண்டன் மாநகரில் நடைபெறுவதை முன்னிட்டு, சிறப்பு மலர் வெளியிடும் பொறுப்பினை எங்களுக்கு அளித்த விழாக்குழுவினருக்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றி!

நூற்றாண்டு விழா மலர் தமிழ் மணம் கமழ வாழ்த்துரை, கவிதை, கட்டுரை வழங்கிச் சிறப்பளித்த கவித்தமிழ் நெஞ்சங்களுக்கும், விளம்பரம் தந்துதவிய வணிகப் பெருமக்களுக்கும், அழகுமிகு மலராக ஆக்கித் தந்த திரு. இனியன் அன்பழகன் மற்றும் திரு. பாலரவி (JR Print) அச்சகத்தாருக்கும் நன்றி! நன்றி!!


தமிழ் மொழிக்கும் - தமிழ் இனத்திற்கும் - தமிழ் நாட்டிற்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆற்றிய தொண்டினை நினைவு கூர்ந்து, இம்மலரை உங்கள் கனிவான பார்வையினுக்கு வணங்கித்தருகிறோம். கலைஞர் புகழ் ஓங்குக! வாழ்க தமிழ்!!

அன்புடன்

# மலர்க்குழு

இர. அன்பழகன்
முனைவர் மு. இளங்கோவன் (புதுச்சேரி)
இர. செழியன்
அ. அன்பரசு
ப. கோவிந்தராசன்
இராம சந்திரசேகரன் (தஞ்சாவூர்)
அல்லி குமார்
தவமணி மனோகரன்
இனியன் அன்பழகன்


/SuvaiFoods.UK /suvaifoods
For Wholesale & Catering Orders
suvaifoods.co.uk
0203 441 5020
SUVAI
Taste of India
UNITED KINGDOM | HONG KONG | SINGAPORE | MALAYSIA
Google
FRESHLY PREPARED & DELIVERED NEXT DAY!
IDLI & DOSA (Batter Mix)
vada batter
CHAPATI
Suvai Foods UK LTD Unit 6, Riverside Industrial Estate, Thames Road, Barking 1G1 1OND



“எனது செங்கோலை எவரும் பறிக்கலாம்.
எழுதுகோலைப் பறிக்க எவரும் பிறக்கவில்லை”